ஸ்ரீ:

ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரான
ஸ்ரீகூர நாராயண ஜீயர் ஸ்வாமி
திருவாய் மலர்ந்தருளிய


ஸுதர்சந சதகம்.

ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கர மடாதீச ஜகத்குரு
ஸ்ரீ [illegible]
[illegible]

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியன் இயற்றிய
பதவுரை விசேஷவுரையுடன்

மதுரை ஹரிஸமயதிவாகர அச்சுக்கூடத்திலும்,
திருக்குடந்தை ஸ்ரீகோமளாம்பா அச்சுக்கூடத்திலும்
அச்சிடுவிக்கப்பட்டது,

[illegible] ஸம்வத்ஸரம்.



[illegible]மாலா —ஸீரீஸ் நெ. க.

ஸ்ரீரஸ்து.

ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரான

ஸ்ரீகூரநாராயண ஜீயர் ஸ்வாமி

திருவாய் மலர்ந்தருளிய

ஸுதர்சநசதகம்.

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் இயற்றிய

பதவுரை விசேஷவுரையுடன்,

மதுரை:


ஹரிஸமயதிவாகர அச்சுக்கூடத்தில்

அச்சிடுவிக்கப்பட்டது.

1926,

இதன் விலை 0—12—0]   [போஸ்டேஜ் தனி.

ஸ்ரீரஸ்து.



"ஜ்யோதிஷ்டோமாயுஷமதிஜய்யதாம்"

முன்னுரை.

திருவரங்கர் பெரிய கோயிலில் ஸ்ரீரங்க நாராயணஜீயர்ஸ்வாமி பீடத்தில் அதிபதிகளாக எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளுள் ஒருவரான ஸ்ரீகூரநாராயணஜீயர்ஸ்வாமி திருவாய் மலர்ந்தருளிய ஸுதர்ஶந ஶதகமென்னும் இந்த ஸ்தோத்ரம் ஶப்தஸந்தர்ப்ப மாதுர்யத்தாலும் அர்த்தவைஶிஷ்ட்யத்தாலும் ஒப்புயர்வற்றதென்னுமிடம் ப்ரஸித்தமேயாம். ஆரோக்யம், ஐஶ்வர்யம், ஆயுஸ்ஸு முதலிய பலன்களை விரும்புமவர்கள் ஸங்கல்பநியமபூர்வகமாக இந்த ஸ்தோத்ர பாராயணம் செய்து இஷ்டப்ராப்திகளையும் அநிஷ்டநிவ்ருத்திகளையும் எளிதில் பெறுகிறார்களென்பதும் ஸர்வப்ரஸித்தம். அநந்யப்ரயோஜநர்களான முமுக்ஷுக்களுக்கும் இந்த ஸ்தோத்ரம் நித்யாநுஸந்தேயமென்பதில் விப்ரதிபத்தி இல்லை.

ஆகவே, ஸஞ்ஜீவநமும் ஸர்வோஜ்ஜீவநமுமான இந்த ஸ்தோத்ரத்திற்குப் பொருள் தெரிந்துகொள்ளவேண்டியது அனைவர்க்கும் ஆவஶ்யகம். இதற்கு அதிஸங்க்ஷிப்தமான ஸம்ஸ்க்ருத டிப்பணி ஒன்றிருந்தாலும் ஸர்வஸாதாரணமான நடையில் தமிழுரையொன்று இருக்கவேண்டியது ஆவஶ்யகமேயாம். இங்ஙனே ஓருரை எழுதும்படியாகப் பலபெரியோர்கள் * பொருளல்லாதவென்னைப்பொருளாக்கி நியமித்தருளினமையால் அந்த நியமனத்தைச் சிரமேற்கொண்ட அடியேன் அஜ்ஞர்க்கும் ப்ராஜ்ஞர்க்கும் வாசியற உபகாரகமாம்படி உரையெழுதத் தொடங்குகின்றேன். நியமேந ப்ரதிபதார்த்தமும், ப்ராயேண தாத்பர்யமும், க்வசித் விஶேஷார்த்தமும், இன்

ரியமையாத இடங்களில் வசனங்களின் வ்யுத்பத்திவிவரணமும், தே வையான புராண வரலாறுகளும் இதில் வரையப்படும்.

இரவிலும் விளக்கிலும் எழுதுவதனால் நேரும் பிழைகளையும், மானிடரியற்கைக்குரிய அஜ்ஞாநாதிகளால் நேரும் பிழைகளையும் மற்றும் அச்சுப் பிழைகளையும் பெரியோர் பொறுத்தருளி, க்ஷமாகுணஸம்பந்நர்களாக விளங்குவார்களென்று விச்வஸிக்கிறேன். அன்றி, குற்றங்குறைகளை எடுத்துக் கூறுவார் பக்கல் க்ருதஜ்ஞனாகவுமிருப்பேன்; அவை திருத்தவும்படும். நிற்க,

இந்த ஸுதர்சநசதக ஸ்தோத்ரத்திற்கு கர்த்தாவான ஸ்ரீ கூரநாராயண ஜீயர் ஸ்வாமி எக்காலத்தவர்? எவ்வாசிரியருடைய திருவடிஸம்பந்தி? இன்னும் என்னென்ன க்ரந்தங்கருளிச் செய்துள்ளார்? இத்யாதி விஷயங்களைப் பலர் விமர்சிக்கப் புகுந்து அவரவர் மனம்போனபடி பேசிப்போருவர். ப்ராமாணிகர்களான பெரியோர்பக்கல் கேட்டுணர்ந்ததை அடியேன் இங்கு ஸங்க்ரஹித்தெழுதுகின்றேன்;—இவர் கூரத்தாழ்வானுடைய காலத்திலே எழுந்தருளியிருந்தவரும், ஸாக்ஷாத் அவருடைய திருவடிகளிலே ஆச்ரயித்து ஸகலசாஸ்த்ரங்களையும் கற்றுணர்ந்தவருமாவர்.

“கோயிலொழுகு” என்னும் க்ரந்தத்தில் “கூரநாராயணஜீயர் வைபவம்” என்ற தலைப்பின்கீழ் எழுதப்பட்டுள்ள சில பங்க்திகளை இங்கே உதாஹரிப்போம்:—“நஞ்சீயர் உபந்யாஸம் நிர்வஹித்துக் கொண்டிருக்கிற காலத்திலே, விண்ணப்பஞ் செய்வாரிலே ஒருத்தர் பெருமாள் ஸந்நிதிக்கு யோக்யமாகாமலிருக்க, ஆழ்வானுடைய சேவிகள் ஆண்டாள் அவரிடத்தில் க்ருபையாலே ஆழ்வான் திருமாலிருஞ்சோலையிலே எழுந்தருளியிருக்கச் செய்தே ஆழ்வான் திருவடிகளிலே ஆச்ரயித்து ஸந்யஸித்து ஸபௌத்ரராய் ஆசார்யன் குடியே நிரூபகமாகக் ‘கூரநாராயணஜீயர்’என்று திருநாமத்தையுடையவராய் மஹாமாந்த்ரிகராய்க்கோயில்வாஸம் பண்ணிக்கொண்டிருக்கிறவரை அழைத்து, ‘உம்முடைய மந்த்ரங்களும்ஒரு கைங்கர்யத்திலே உபயோகிக்கும்’ என்று சொல்லியிருந்தீரே, நீர் இப்போது இந்த விண்ணப்பஞ் செய்வாரைப் பெருமாள் கைங்கர்யத்துக்கு யோக்ய

ர்க்கும்படி பண்ணும்' என்று நியமிக்க, அந்த கூரநாராயணஜீய ரும் ஸுதர்சநசதகத்தைப் பண்ணி, விண்ணப்பஞ்செய்வார் நோயற்றுப் பெருமாள் ஸேவாகாலத்துக்கு யோக்யராகும்படி பண்ணினர்"—என்று கோயிலொழுகில் எழுதப்பட்டுள்ளது.

ஸம்ஸாராவர்த்தோபநிஷத்பாஷ்யமியற்றினவரும் இந்த கூரநாராயணஜீயரேயென்றும், தைத்திரீயோபநிஷத்பாஷ்யமியற் றினவரும் இவரேயென்றும் சிலர் கூறுவதெல்லாம் ப்ராந்திவிஜ்ரும் பிதமேயாம். ஸ்ரீவேதாந்ததேசிகனுடைய காலத்துக்குப் பிற்பட்ட வராயும் அஹோபில மடாதிபதியாயுமிருந்த ஸ்ரீவத்ஸாங்க ஸ்ரீநா ராயணமுனியென்பவரால் செய்தருளப்பட்டது ஸம்ஸாராவர்த்த பாஷ்யம். அந்த பாஷ்யத்தின் அவஸாநத்திலே "வேதாந்தமார்க்க பாதாப்ஜப்ராந்தநிர்மூலநேதஸா । வாதிவேதாந்தஸாராய: ஸ்ரீவத்ஸாங்கேந தர்சித:" என்று அவர் தம்மாலே எழுதப்பட்டுள்ள ச்லோகமும் நோக்கத்தக்கது.

இனி தைத்திரீயோபநிஷத்பாஷ்யம் அருளிச்செய்தவரும் ஸுதர்சநசதககர்த்தாவும் ஸந்நிவ்ருத்திகளேயோவென்னில்; அன்று. ஸுதர்சநசதககர்த்தா கூரநாராயணஜீயர்க்குப்பின் த்ரு தீய பட்டஸ்தராக ஸ்ரீரங்கநாராயணஜீயர் மடத்தில் எழுந்தருளியிரு ந்தவரும், நலந்திகழ் நாராயணஜீயர் என்றும் ஸ்ரீரங்கராஜஜீயர் என் றும் மறுதிருநாமங்களையுடையவருமான ஸ்வாமியே தைத்திரீயோ பநிஷத்பாஷ்யகர்த்தாவாவர். ஆகையாலே, ஸுதர்சநசதககா ரரும் ஸம்ஸாராவர்த்தோபநிஷத்பாஷ்யகாரரும் தைத்திரீயோப நிஷத்பாஷ்யகாரரும் பரஸ்பரம் பிந்நபிந்நவ்யக்திகளென்று தெளி யக்கடவது.

ப்ரக்ருத கூரநாராயணஜீயர் ஸ்வாமியின் ப்ரபாவம் கோயி லொழுகில் சுருக்கமாகவும், ஸ்ரீரங்கநாராயணஸ்வாமி மடப்ரகாசி கையில் சிறிது விரிவாகவும் காணத்தகும். இவர் அறுபது திரு நக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார்.

இவர் மந்த்ரசக்திப்ரபாவத்தாலே அழகிய மணவாளனுக்குப்பல கைங்கர்யங்கள் நிர்வஹித்துப் போந்தாரென்றும், இவருடைய காலத்தில் 'யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே

நகத்ருஸங்கல்பிஷ்யந்தி வ்யாயிஷ்யந்தி பரிக்ஷதஸ்ஸ்வரா:” என்ற ப்ரமாணம் ஸர்வதோமுகமாகவேயிருந்ததென்றும் ஆசார்யஹ்ருதயர் அருளிச்செய்யக் கேட்டிருக்கை.

இவர் அருளிச்செய்த க்ரந்தங்களில் ஸாரார்த்தசதகமொன்றே ப்ரஸித்தமாயிராநின்றது. கோயிலில் ஸ்ரீரங்கநாராயணஜீயர் மடத்தில் ஸ்வாமிவிக்ரஹங்களெழுந்தருளியிருக்கிற இவருடைய திவ்யமங்களவிக்ரஹத்தின் ஸிம்ஹாஸநத்தில் நான்கு ஜீயர்களை எழுந்தருளப் பண்ணியிருக்கக் காண்கையாலே இவர்க்கு நான்கு ஜீயர்கள் ஸந்யாஸி ஶிஷ்யர்களாக இருந்தனரென்று தெரிகிறது. மற்றும் இவரது விசேஷங்களை வல்லார்வாய்க் கேட்டுணர்க.

இந்த ஸாரார்த்தசதகம் நிகமநஶ்லோகமுட்பட நூற்றொரு ஶ்லோகங்கள் கொண்டது. இதில், இருபத்தினான்காவது ஶ்லோகமளவும் ஜ்ஞாநவர்த்தநமும், அதற்குமேல் முப்பத்தெட்டாம்ஶ்லோகமளவும் பக்திவர்த்தநமும், அதற்குமேல் ஐம்பதாம் ஶ்லோகமளவும் ஸ்வரவர்த்தநமும், அதற்குமேல் அறுபத்தோராம் ஶ்லோகமளவும் நாஸிவர்த்தநமும், அதற்குமேல் எழுபத்தினான்காம் ஶ்லோகமளவும் அக்ஷவர்ணநமும், அதற்குமேல் நூறும்ஶ்லோகமளவும் பாபஷவர்ணநமுமாய்ச் செல்லுகிறது.

“துஞ்சும்போதழைமின் துயர்வரில் நினைமின் துயரிலீர் சொல்லிலும் நன்றாம், நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு நாராயணாவென்னும் நாமம்” என்றாற்போலே ஸர்வதா ஸர்வவிதப்ரஸக்ஷேமான இந்த ஶாஸ்த்ரம் ஸர்வர்க்கும் ஸதாநுஸந்தேயமாகக் கடவது.

இங்ஙனம்:—
பெருமாள்கோயில், ப்ரதிவாதிபயங்கரம்,
அண்ணங்கராசார்ய தாஸன்.

॥ ஶ்ரீ: ॥

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:॥

ஶ்ரீகூரநாராயணமஹாமுநீந்த்ர ப்ரணீத

ஶ்ரீஸுதர்ஶநஶதகஸ்ய வ்யாக்யா ।

ஶ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கர-அண்ணங்கராசார்ய விரசிதா॥

தனியன்.

ரங்கேஶ விஜ்ஞப்தி கராமயஸ்ய
சகார சக்ரஸ்தவம் நிவ்ருத்தயே ।
ஸமாஶ்ரயேஹம் வரதார்த்திநாம் யஃ
தம் கூரநாராயண நாமகம் முநிம் ॥

பதவுரை.

யஃ—	யாவனொரு கூரநாராயண ஜீயர்
ரங்கேஶ விஜ்ஞப்திகர ஆமயஸ்ய நிவ்ருத்தயே	திருவரங்கப்பெருமாளரையருடைய நோய் தீர்வதன்பொருட்டு
வரதார்த்திநாம்	அபேக்ஷிதங்களை நிறைவேற்றவல்ல
சக்ரஸ்தவம்	திருவாழியாழ்வான்விஷயமாண ஸ்தோத்திரமாகிய ஸ்ரீஸுதர்சன சதகத்தை
சகார	அருளிச் செய்தாரோ
தம் கூரநாராயண நாமகம் முநிம்	அந்த ஸ்ரீகூரநாராயணஜீயர் ஸ்வாமியை
அஹம் ஸமாஶ்ரயே	அடியேன் பணிகின்றேன்.

கருத்து:—திருவரங்கப் பெருமாளரையர் திருமேனியில் நோவு சாத்திக் கொண்டிருக்கையில் அதுகண்டு ஸஹித்திருக்கமாட்டாத ஸ்ரீகூரநாராயண ஜீயர்ஸ்வாமி அந்த நோய்தீருவதற்காக ஸ்ரீஸுதர்சநாழ்வான் விஷயமாக நூறு ச்லோகங்கள் கொண்ட ஸ்தோத்ரத்தை யருளிச் செய்தார். இந்த ஸ்தோத்திரமானது ஸர்வாபீஷ்டங்களையும் தலைக்கட்டித் தரவல்லது. இப்படிப்பட்ட ஸ்தோத்ரத்தை யருளிச் செய்த அந்த ஜீயர் ஸ்வாமியை அடியேன் தொழுகின்றேனென்கை............

ஸ்ரீ:

ஸுதர்சநசதகத்தின் அடிவரவு.

---

1. [illegible]

2. [illegible]

3. [illegible]

4. [illegible]

5. [illegible]

6. [illegible]

7. [illegible]

8. [illegible]

9. [illegible]

10. [illegible]

அடிவரவு முற்றிற்று.



பெருமாள் கோயில், பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர்.

(ஸ்தோத்ர, திவ்யப்ரபந்த-வ்யாக்யாதா.)

Kumaran Press, Conjeeveram.

ஸ்ரீரஸ்து.



ஸ்ரீஸௌம்யஜாமாத்ருமுநயே நம:

ஸ்ரீகூரநாராயண ஜீயர்ஸ்வாமி
அருளிச்செய்த
ஸுதர்சநசதகம்.

ஸௌதா₃மந்யுஜ்ஜிஹாநா
 தி₃ஶி விதி₃ஶி திரஸ்க்ருத்ய ஸாவித்ரமர்சி:
பா₃ஹ்யாப்₄யந்தா₄கார
 க்ஷதஜக₃த₃க₃த₃ங்காரபூ₄ம்நா ஸ்வதா₄ம்நா ।
தோ₃:[illegible]
 [illegible]
ஜ்வாலா ஜாஜ்வல்யமாநா விதரது
 ப₄வதாம் வீப்ஸயாऽபீ₄ப்ஸிதாநி ॥ க ॥

ஸ்ரீ:
பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யர்
இயற்றிய பதவுரையும் விசேஷவுரையும்.

கூரநாராயணாக்₂யஸ்ய ஸூரேர் நிரந்தரஸௌஹ்ருத₃ம் ।
ஸ்ரீஸுத₃ர்ஶநஸ்தோத்ரம் வ்யாக்₂யாஸ்யதாம் ஶுபே₄ ॥

பதவுரை.

பா₃ஹ்யாப்₄யந்தா₄காரக்ஷத ஜக₃த₃க₃த₃ங்கார பூ₄ம்நா } வெளியிலுள்ளதும் உள்ளுள்ளதுமான இருள்களாலே கெட்டுப்போன உலகங்கட்கு வைத்தியனாகும் பெருமையை யுடைய

ஸ்வபாஸா	தனது ஒளியினால்
பாஸ்வதாபா:	ஸூர்யனுடையதான ஒளியை
திரஸ்க்ருத்ய	கீழ்ப்படுத்தி
திஶி விதிஶி	எல்லாவிடங்களிலும்
உஜ்ஜிஹாநா	வியாபித்து விளங்குவதும்,
ப்ரௌட: புஜகண்டூ தர்ப்பதைத்ய வித்விஷாம் வதூ கண்ட ஶூந்யீகரிஷ்ணு:	புஜங்களிலுள்ள தினவினால் மிகவும் சொக்கரிக்கின்ற அசுரர்களின் பெண்டுகளுடைய கழுத்துகளை [த் தாலிபற்றதாக] சூன்யமாக்குவதில் வல்லமை பெற்றதும்,
ஜாஜ்வல்யமாநா	ஒப்புயர்வின்றி ஜ்வலித்துக் கொண்டிருப்பதுமான
ஸௌதர்ஶநீ ஜ்வாலா	திருவாழியாழ்வானுடையதான ஜ்வாலையானது
வ: ஸமீஹிதாநி	உங்களது விருப்பங்களை
வீப்ஸயா விதரது	அடிக்கடி தந்திடுக.

* * * இது முதல் இருபத்தினான்கு ஶ்லோகமளவும் திருவாழியாழ்வானுடைய ஜ்வாலையைப் பற்றின வர்ணனையாய்ச் செல்லுகிறது. அதில் இந்த ஶ்லோகத்தினால் சொல்லப்படுவது யாதெனில்;

உலகத்தில் இருள் இருவகைப்படும்; அகவிருள் என்றும் புறவிருள் என்றும். அகவிருள் அஜ்ஞாநாந்தகாரமெனப்படும்; புறவிருளென்பது ப்ரஸித்தமானதேயாம். இவ்விரண்டுவகையிருளாலும் தடுமாறுகின்ற உலகத்தவர்கட்கு அவ்விருளைத் தொலைத்தருளி வாழ்விக்கவல்ல வொளியினால் ஸூர்யனுடைய தேஜஸ்ஸைத் திரஸ்கரித்திருக்கும் ஸுதர்சந ஜ்வாலை. (ஸூர்யன் புறவிருளொன்றை மாத்திரமேயன்றோ போக்கவல்லன்.) அசுரர்களுக்கு எப்போதும் யுத்தம் செய்வதிலேயே உத்ஸாஹமாதலால் சண்டைக்கு யார் அகப்படுவார்களென்று அவர்களுடைய புஜங்கள் தினவுகொண்டு அதனால் அவர்கள் மிகவும் கொக்கரிப்பார்கள்; அன்னவர்களைத் தொலைத்து அவர்களது பெண்டிரைக் கைம்பெண்டாட்டிகளாக ஆக்கவல்லதுமான ஸ்ரீஸுதர்சந ஜ்வாலை உங்களுடைய அபீஷ்டங்களைப் பரிபூர்ணமாக்குக என்பதாம்.

[illegible]
[illegible] [illegible] என்கிற [illegible] என்னும் [illegible] த்தை முற்கொண்டு [illegible] யாகுமா யிருக்கிறது. [illegible] "[illegible]" என்ற பாடமும் ஏற்கும்; பொருள் ஒக்கும். [illegible] மான என்றுமாம், ஸமர்த்தமான என்றுமாம். [illegible]

இந்த ஶ்லோகம் முழுதும் ஸ்ரக்தராவ்ருத்தம்......... (க)

[illegible] ॥ (உ)

[illegible]	பூலோகத்தில்
[illegible]	மேரு பர்வதத்தினது காந்திகளி[னால்]
[illegible]	ஸேவிக்கப் பெற்றதும்
[illegible]	ஆகாசத்தில்
[illegible]	ஸூர்யனுடைய
[illegible]	கிரணங்களினால்
[illegible]	எதிர்கொண்டு உபசரிக்கப்பட்ட
[illegible]	ஸ்வர்க்கலோகத்தில் [அம்]
[illegible]	தேவர்களின் மாளிகைகளினுடைய (அல்லது) நக்ஷத்ராதி தேஜ: பதார்த்தங்களினுடைய
[illegible]	ப்ரகாசங்களினால்
[illegible]	சுச்ரூஷை பண்ணப்பெற்றதும்
[illegible]	ஸர்வதிக்குகளிலும் சுழன்று [illegible] பித்து நெருங்கின தீப்பொறிகளுடையதும்

த்ரிபுவந விஜயவ்யக்ரம் — மூவுலகங்களையும் வெல்வதில் முயற்சியுடையதும்

(ஸுதர்சநம்)

ஜாக்ரத்ப்ரதாபம் — எப்போதும் விளங்காநின்ற தாபசக்தியையுடையதும்

உக்ரம் — (எதிரிகட்கு) பயங்கரமும்

சாக்ரம் — திருவாழியாழ்வானுடையதுமான

தத் — அப்படிப்பட்ட [ப்ரஸித்தமான]

மஹ: — தேஜஸ்ஸானது

வ: — உங்களுக்கு

பூயஸ்யை — மிகவும் அதிகமான

ஸம்ருத்த்யை — செல்வத்தின்பொருட்டு

ஸ்தாத் — விளங்குக.

* * * நான்காம் பாதத்திலுள்ள "த்ரிபுவந விஜய வ்யக்ரம்" என்ற விசேஷணத்தைப் பூர்வார்த்தமும் விவரிக்கிறது. "பாடக்ரமாதர்த்தக்ரமோ பலீயாந்" என்ற நியாயத்தை யடியொற்றி "ஸுமேரௌ ஸௌமேரவீபி: ப்ரபாபி: ப்ராப்தஸேவம்" என்று முதலில் யோஜிக்கப்பட்டது; "த்யுவியோமாந்தரிக்ஷம் த்ரைளோக்யரூப:" என்றிறே அடைவு.

பூலோகத்தில் மேருபர்வதத்தின் ஒளிகள் திருவாழியாழ்வானுடைய திவ்ய தேஜஸ்ஸுக்கு அடிமை செய்கின்றன வென்றது—மேருமலையின் நிரம்பிய ஒளிகளிற் காட்டிலும் மேம்பட்டு விளங்குவது ஸ்ரீஸுதர்சந தேஜஸ்ஸு என்றபடி. ஆகாசத்தில் இரவியின் கதிர்கள் எதிர்கொள்ளுகின்றனவென்றும், ஸ்வர்லோகத்தில் தேவயாநாந்தரம் தீப்திகள் சிச்ரூஷை செய்கின்றனவென்றும் சொன்னதற்கும் அதுவே கருத்தாம். எனவே மூவுலகங்களிலும் உள்ள தேஜ:பதார்த்தங்களையெல்லாம் வென்று வீறுபெற்று விளங்குவது திருவாழியாழ்வானுடைய தேஜஸ்ஸு என்றதாயிற்று.

பின்னடிகளின் கருத்து ஸ்பஷ்டம். ஸுமேரோ: ஜ்யோதி:— ஸௌமேரவ்ய:, தாபி:. [தேவயாநாந்தரம்] 'யாநி' என்னும் பதம் த்ரு

ஹத்துக்கும் தேஜஸ்ஸுக்கும் வாசகமாகையாலே இரண்டுவகையான பொருள்களும் இங்கு விவக்ஷித்து கொள்ளப்பட்டன. சக்ரஸ்தம் வஹ்நிஸுலபம் சக்ரஹஸ்தம் ஸ்மராமி...... (உ)

பூர்ணே பூர்ணேந்துஸுதாநாம் ஸாந்த்ரஹி லஸத: ஸோமபிம்பஸ்தலாயே, பாஹாஸாகாவகாஹக்ஷிதிககநதிவஸ்ஸ்ரீஸுராஜத்ருமஸ்ய। ஜ்யோதிஸ்ஸூர்யப்ரஸவ: புஷ்பிதஸாந்த்ரஸம்பத் உத்தம்ஸலக்ஷ்மீம், வாஷீநாஸாஸ்வேஷு ப்ரதிஸது பவதாம் ஸபுஷ்டம் ப்ரஹர்ஷம் ॥ (௩)

ஸுதாநாம் பூர்ணை:	அம்ருதரஸ ப்ரவாஹங்களாலே
பூர்ணே	நிறைந்ததாயும்
ஸாந்த்ரஹி	மிக்க பெருமை பொருந்தியதாயு மிருக்கிற
ஸோமபிம்ப ஸ்தலாயே	சந்திரபிம்பமாகிற பாத்தியில்
லஸத:	விளங்குகின்றதாய்
பாஹாஸாகாவகாஹ க்ஷிதி ககந திவ:	புஜங்களாகிற கிளைகளினாலே பூமியையும் ஆகாயத்தையும் ஸ்வர்க்கத்தையும் ஆக்கிரமித்ததாயுள்ள
ஸ்ரீஸுராஜத்ருமஸ்ய	திருவாழியாழ்வானாகிற கல்பவ்ருக்ஷத்தினுடைய—,
புஷ்பிதஸாந்த்ரஸம்பத்	புஷ்பஸம்ருத்தியை விளக்குவதாயும் —தேவதைகளின் செல்வத்தை விளங்கச்செய்வதாயும்
ஆசாஸ்வேஷு உத்தம்ஸலக்ஷ்மீம் வாஷீநு	திங்மண்டலங்களில் ஸிரோபூஷணஸோபையைப் பெருக்காநின்றதாயுமுள்ள
ஜ்யோதிஸ்ஸூர்யப்ரஸவ:	ஜ்யோதிஸ்ஸென்னும் தளிரானது
பவதாம்	உங்களுக்கு
ஸபுஷ்டம்	மேன்மைபொருந்திய
ப்ரஹர்ஷம்	ஸந்தோஷத்தை
ப்ரதிஸது	தந்திடுக.

* * * திருவாழியாழ்வானை ஒரு வ்ருக்ஷமாகவும் அவருடைய சோதியை ப்ரவாஹமாகவும் ரூபணம் பண்ணிப்பேசுகிறார் இதில். உலகத்தில் வ்ருக்ஷமானது தண்ணீர் நிறைந்த பாத்தியில் விளங்கும்; சுற்றிலும் தழைத்தோங்குகின்ற கிளைகளையுடைத்தாயிருக்கும்; அத்தன்மை திருவாழியாழ்வானுக்கும் பொருந்தினபடி சொல்லுகிறது பூர்வார்த்தத்தில்.—அம்ருதவெள்ளம் நிறைந்த சந்த்ரபிம்பமாகிற பாத்தியில் விளங்காநின்றதாய்த்து ஸ்ரீஸுதர்சந வ்ருக்ஷம். சக்கரத்தாழ்வான் சந்திரமண்டலத்தில் விளங்குவதாகச் சொல்லுகிறவிதற்குக் கருத்து என்னென்னில்; ஸாத்வதப்ரயத்ந ஸம்ஸ்தாநக்ரமம் சொல்லுமிடத்து ஸ்ரீஸுதர்சநாழ்வான் சந்திரமண்டலத்தில் எழுந்தருளியிருக்கும் வண்ணமாகச் சொல்லப்பட்டிருத்தலால் இங்ஙனே அருளிச் செய்யப்பட்டது. "சந்த்ரபிம்பஸ்ய மத்யஸ்தம் தாரம் த்யாயேத் ஸமாஹித: । தஸ்ய மத்யே ஸ்திதம் தேவம் ரக்தவர்ணம் ஸஹஸ்ரதம்" என்று அஹிர்புத்ந்யஸம்ஹிதையில் இருபத்தாறும் அத்யாயத்தில் (ச்லோ-5) சொல்லப்பட்டதிறே. இந்த சதகந்தன்னிலும் மேல் "ப்ரணவஸஸ்யஸாரஸீருஹஷட்பதாணவர்த்தி" என்றும் "சந்த்ராய: காரியஜ்ஞோபவர்ஷி" என்றும் "ஸ்வதஸஸ்யஸாரம் ப்ரத்யக்ஷதந்த்ரா நக்ஷத்ர" என்றுமருளிச் செய்திருப்பவை இங்கே ஸ்மரிக்கத்தக்கன. உலகத்தில் வ்ருக்ஷம் தண்ணீர் நிறைந்த பாத்தியில் விளங்குவதுபோல் இந்த ஸ்ரீஸுதர்சந வ்ருக்ஷம் ஸுதாப்ரவாஹபூர்ணமான சந்த்ரபிம்பமாகிற பாத்தியில் விளங்காநின்றதென்றதாயிற்று.

வ்ருக்ஷமானது சுற்றிலும் தழைத்தோங்காநின்ற கிளைகளினால் கீழும் மேலும் இடமடைத்துக்கொண்டு விளங்குவதுபோல் இந்த ஸுதர்சந வ்ருக்ஷம் தனது திருக்கைகளாகிற சாகைகளினாலே த்யாவாப்ருதிவிகளையெல்லாம் இடமடைத்துக் கிடக்கிறதென்கிறது இரண்டாம் பாதம். நீண்ட கைகளைக் கிளைகளோடு ஒப்பிடுதல் கவி மரபு. "சக்ராஜ்ஞாசாகி" என்றவிடத்து த்ரிசாகம் ஸாமாந்யமாயிருந்தாலும் இங்கே க்ஷீரவ்ருக்ஷமாகிற விசேஷத்துக்கு வாசகமாகக்கடவது. அன்றியே, த்ரோணாம் ராஜா — ராஜத்ராஜ: [illegible] தேவ ராஜத்ரா: என்று வ்யுத்பத்தி பண்ணுவா

ரும் சிலருளர். வ்ருக்ஷத்தில் செந்தளிர் உண்டாகிறாப்போல் இந்த ஸுதர்ஸந வ்ருக்ஷத்தில் செவ்விய சோதியே ப்ரவாளமென்கிறார். [ப்ரகடிதஸுமநஸ்ஸம்பத்] பல்லவமானது புஷ்பஸம்பத்தை விளக்குமே; அப்படியே இந்த ஸுதர்ஸந ஜ்யோதிः ப்ரவாளமும் செய்யா நின்றதென்பதை ஶ்லேஷரீதியாலே சொல்லுகிறார். ஸுமநஶ்ஶப்தம் புஷ்பத்துக்கும் தேவதைகளுக்கும் வாசகம். பல்லவமானது ஸுமநஸ்ஸுவான புஷ்பத்தின் ஸம்பத்தை ப்ரகடநம் செய்யும்; ஸுதர்ஸந ஜ்யோதிः ப்ரவாளமானது ஸுமநஸ்ஸுக்களான தேவதைகளின் செல்வத்தை ப்ரகடநம் செய்யா நிற்குமென்க. தேவர்களின் செல்வத்தைக் கொள்ளை கொண்டு அவர்களை நலிகின்ற அஸுரராக்ஷஸர்களை அழிக்கும் முகத்தால் ஸுதர்ஸநஜ்யோதிஸ்ஸானது தேவதாஸம்பத்ப்ரகடநகாரியாகிறபடி. [ககுபாமாபேடுகக்ஷோசிதோத்தம் பாதநு.] மாதர்கள் பல்லவத்தை ஶிரோபூஷணமாகக் கொள்ளுவார்கள்; ஸுதர்ஸநஜ்யோதிஸ்ஸும் திக்குக்களில் ஶிரோபூஷணமாக விளங்காநின்றதாய்த்து. திருவாழியின் சோதியானது திசைகள்தோறும் அழகிதாகப் பரவியிருக்கின்றதென்றபடி. 'ககுப்'ஶப்தத்தின் ஸ்வாரஸ்யமும் நோக்கத்தக்கது.

இவைகளால் ப்ரவாளமென்னவமைந்த ஸுதர்ஸநஜ்யோதிஸ்ஸானது உங்கட்குச் சிறந்த மகிழ்ச்சியைத் தருகவென்றாராயிற்று. ... ... (௩)

கராகாரஸஹஸ்ரவிஶாரதி விததபக்ஷவிபக்ஷாபக்ஷாத் நாநாஸஸ்த்ராஸ்த்ரநாநாநிர்ஜிதவிநிர்ஜிதநநவேஶேஷமேகமே: । குஞ்ஜரகேயகேகநாதகதஹரிஹதேர்ஹாஸாயவீர்யஸ்யஹேதே: தச்க தீக்ஷ்ணநாமதேவாஸ்ஷு வதராரா: வாஷ்மாதாத் வஸாஷாயத் ॥ (௪)

ஶாயவீர்யஸ்ய	எம்பெருமானுடையதான
ஹேதே:	திருவாழியினுடைய
யந்மஹ:	யாதொரு தேஜஸ்ஸானது

ஸஹஸ்ராத் அராத் — ஆயிரக்கணக்கான அரஸமூஹத்தினின்றும்,

விபக்ஷக்ஷபணக்ஷமாத் — எதிரிகளைத்தொலைப்பதில் ஸமர்த்தமான

அக்ஷாத் — அக்ஷத்தில் நின்றும்

ஸாவித்ரஸநாபே: — ஸூர்யனோடு ஒத்த

நாபே: — நாபியில் நின்றும்

நிஜமஹிமமிதக்ஷ்மாமண்டலாத் — தனது பெருமையினாலே அளவிடப்பட்ட பூமியையுடைத்தான

நேமே: — நேமியில் நின்றும்

யத் விஸரதி — எங்கும் பரவுகின்றதோ,

அநகை: ஶ்ரௌத்ரியை: — ஒருமிடறான வேதங்களாலே

ஸ்துதமஹிம — துதிக்கப்பட்ட பெருமையையுடையதும்

சதுராஶாந்தகக்ஷம் — நான்கு திசைகளிலும்

ஸமயதே — பரவுகின்றதுமான

தத் (தேஜ:) — அந்த ஸ்ரீஸுதர்சந தேஜஸ்ஸு

வ: — உங்களுக்கு

சதுர: புருஷார்த்தாந் — (அறம் பொருள் இன்பம் வீடென்னும்) நான்கு புருஷார்த்தங்களையும்

புஷ்ணாது — பெருக்கத் தந்திடுக.

* * * அரம், அக்ஷம், நாபி, நேமி—என்னுமிவை திருவாழியாழ்வானுடைய அவயவங்கள். அந்த அவயவங்கள் தோறும் கிளர்கின்ற ஜ்வாலையே ஸுதர்ஶந ஜ்வாலையாம். (அவயவஸமுதாயமேயிறே அவயவியாகிறது.) அதனுடைய புகழ் ஸகலவேதங்களிலும் பொலியும். அத்தகைய ஸுதர்ஶந ஜ்யோதிஸ்ஸானது அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு புருஷார்த்தங்களையும் உங்களுக்கு அளித்திடுக வென்கிறார்.

"ஸஹஸ்ராராத்" என்ற இரண்டனுள் ஒன்று பஞ்சமீ ஏகவசநம்; ஒன்று அவ்யயம். ஸஹஸ்ராணாம் ஸமாஹார:—ஸஹஸ்ரீ; தஸ்யா: என்று பஞ்சமீ ஏகவசநத்திற்கு வ்யுத்பத்தியாம். அபேக்ஷவிவரண யம். "ஶதம், ஸஹஸ்ரம்" இத்யாதி ஸம்க்யாவாசக பதங்களை விஶேஷ

க்ஷணமாகவுடைய விஶேஷ்ய பதங்கள் பஹுவசநாந்தமாக இருக்கவேணும்; "ஶதம் பாத்ரா:, ஸஹஸ்ரம் பஶவ:" இத்யாதிகள் உதாஹரணம். இவ்விடத்தில் ஸஹஸ்ராத் அரேப்ய: என்றிருக்கவேணுமேயன்றி 'க்ஷுராத்' என்று ஏகவசநாந்தமாயிருத்தல் பொருந்துமோ வென்று விசிகித்ஸை உண்டாகக்கூடியதே;

இதற்கு ஸமாதாநவாக்யங்கள் பலவுண்டு:—ஸஹஸ்ர ஶப்தம் வ்யாக்யம் க்ஷுரஸமூஹத்தில் ஸாக்ஷாத்தாக அந்வயிப்பதல்ல; ஸமூஹாவயவமான அரங்களில் அந்வயிக்கும்; ஸமூஹம் ஒன்றேயாகையாலே "க்ஷுராத்" என்ற ஏகவசநப்ரயோகம் கூடும் என்பர் சிலர். இங்ஙனன்றியே, ஸஹஸ்ரஶப்தம் ஸஹஸ்ராவயவபரமாய் அதன்மேல் 'அர்ஶஆத்யச்' என்றுகொண்டால் 'ஸஹஸ்ராவயவவிஶிஷ்டாத் க்ஷுரஸமூஹாத்' என்றதாகிறது என்பர் சிலர்; இங்ஙனுமன்றிக்கே, நடாதூர் அம்மாளருளிச்செய்த பரத்வாதிபஞ்சகஸ்தோத்ரத்தில் "ஶ்ரீரங்கஸ்தலவேங்கடாத்ரிகரிகிர்யாதௌ ஶதேஷ்டோத்தரே ஸ்தாநே க்ராமநிகேதநேஷு ச ஸதா ஸாந்நித்யமாஸேதுஷே" என்ற ஶ்லோகத்தில் "கஷ்டோத்தரே ஶதே ஸ்தாநேஷு" என்னாதே "ஸ்தாநே" என்று ஏகவசநப்ரயோகம் காண்கையாலே அப்படியே இங்கும் கூடும் என்பர் சிலர். இங்ஙனே நிர்வஹிக்கும் படிகள் பலகிடந்தாலும் ஹ்ருதயங்கமான நிர்வாஹம் ஒன்றுண்டு; அதாவது—அராணாம் ஸமூஹ: க்ஷுர: என்று விக்ரஹம் பண்ணுமல் 'அராணாம் ஸம்பந்தீ க்ஷுர:' என்றுகொண்டு க்ஷுரபதத்தை விஶேஷணமாகவும் ஸஹஸ்ரபதத்தை விஶேஷ்யமாகவுங்கொண்டு "அரங்களினுடையதான ஆயிரத்தில் நின்றும்" என்று பொருள் கொள்ளுதல் மிக்கபொருத்தமுடையது. அரங்களினுடைய ஆயிரம் என்றால், ஆயிரம் அரங்கள் என்றே பொருள்படும்: "ஸஹஸ்ரம் காவீநாம் ஶதமேவ நவப்ரஸூததேநாஸ்" "பஶூநாம் ஶததேநாஸ்" இத்யாதிஸ்தலங்களில், ஸஹஸ்ரம் காவ:, ஶதம் பஶவ:—என்று பொருள்படுமாறுகாண்க.

இந்த ஶதகந்தன்னிலே "ஹேதீநாம் ஹேதயஸ்ஸம் வோ திஶந்து ஶஶதி ஸஹஸ்ராரணாநாம்" என்ற ப்ரயோகமும்

இங்கே த்ரஷ்டாவுமாகப் பொருந்தும்; 'கரணாநாம் த்ரஷ்டா' = ஸஹஸ்ரம் கரணி என்றபடியிறே.

இனி இவ்வழிகளைத்தவிர வேறுவழியுமுண்டாகில் அறிவிற் சிறந்தோர் அங்ஙனே உபபத்தி சொல்லிக்கொள்க.

'தூராத்' என்ற சப்தம் "தூராந்திகஸமீபயோ:" என்ற நிகண்டுப்ரகாரத்தின்படி சேய்மை அண்மை என்னுமிருவகைப்பொருள்படும். நெடுந்தூரம் வரையில் என்று இங்கே பொருளாகக்கடவது. ஸமீபத்திலும் தூரத்திலும் என்றுமாம். "நிஜவிபவவபுர் விஸ்தரே:" என்ற நெறிவிசேஷணம்—ஸ்ரீவைகுண்டநெறி யானது பூமியிற்காட்டிலும் மிக்க விஸ்தாரமுடைய தென்னுமிடத்தைத் தெரிவிக்கும். "தூராந்தரே ப்ரேக்ஷணஸம்ப்ரவிஷ்டை:" என்னும் பாடமுண்டாம். ... ... (௪)

ஶ்யாமம் தாமவ்யாப்த்யா க்வசந பகவத: க்வாபி பிஶங்கம் ப்ர-
க்ருத்யா, ஶுப்ரம் ஶேஷஸ்ய பாஸா க்வசந மணிருசா க்வாபி
தத்வேஸ்வரக்த்யா நீலம் ஶ்ரீநேத்ரகாந்த்யா க்வசிதபி ஶ்யாமந
ஸ்வாஸ்ஸதீவ்யேஸ்வ வித்ராத், வ்யாதந்வாநம் விதாநஶ்ரியமிவ
விநதாஸூநு வக்ஷஸ்தலாத் ॥ (௫)

க்வசந	ஓரிடத்தில்
பகவத:	எம்பெருமானுடைய
தாமவ்யாப்த்யா	திருமேனி நிறத்தின் வ்யாப்தியி[னாலே]
ஶ்யாமம்	பசுமைநிறத்ததாயும்
க்வாபி	ஓரிடத்தில்
ப்ரக்ருத்யா பிஶங்கம்	இயற்கையாகவே பிங்கள வர்ண[மாயும்]
க்வசந	மற்றோரிடத்தில்
ஶேஷஸ்ய பாஸா	திருவனந்தாழ்வானுடைய ஒளியி[னாலே]
ஶுப்ரம்	வெண்ணிறமாயும்
க்வாபி	மற்றுமோரிடத்தில்

தச்சேஷஸ்ய	அந்தத் திருவனந்தாழ்வானுடை
மணிரோசிஷா	மாணிக்கவொளியினாலே [யவே
ரக்தம்	சிவந்ததாயும்
க்வசித்க்வசித்	இன்னுமோரிடத்தில்
ஸ்ரீநேத்ரகாந்த்யா நீலம்	பிராட்டியினது திருக்கண்களின் காந்தியினாலே நீலநிறத்ததாயும்
	(இப்படி நானாவர்ணங்கள் விரவப்பெற்றமையாலே)
ஸ்ரீதேவ்யா: ப்ரியேசஸ்ய	ஸ்ரீதம்பதிகளான பெரியபிராட்டியார்க்கும் பெரியபெருமாளுக்கும்
விசித்ரம் விதாநச்ரியம்	விசித்திரமான மேற்கட்டியின் சோபையை
வ்யாதந்வாநமிவ வ்யவஸ்திதம்	விசேஷமாக உண்டுபண்ணுகின்றதுபோன்றுள்ள
ஸுதர்சநம்	திருவாழியாழ்வானுடைய தேஜ
வ:	உங்களுக்கு [ஸ்ஸானது
ஸர்வ உபவிநதாத்	ஸௌஸ்வஸ்த்யத்தை வளரச்செய்திடுக.

கார்முகில் வண்ணனான எம்பெருமானுடைய திருமேனியொளியின்பரவுதலினால் சிலவிடங்களில் ஸ்யாமவர்ணமாயும், சிலவிடங்களில் இயற்கையாகப் பிங்களவர்ணமாயும், *அரவத்தமளியின் ஒளியினால் சிலவிடங்களில் ஸுக்லவர்ணமாயும், அத்திருவனந்தாழ்வானுடைய திருமுடியில் விளங்குகின்ற மாணிக்கத்தின் ஒளியினால் சிலவிடங்களில் ரக்தவர்ணமாயும், குவளையங்கண்ணியான பிராட்டியின் திருக்கண்ணொளியினால் சில விடங்களில் நீலவர்ணமாயும் இப்படி பலவகை வர்ணங்கள் விரவப்பெற்றிராநின்ற ஸுதர்சந ஜ்யோதிஸ்ஸானது பெருமாளும் பிராட்டியுமாகிற திவ்யதம்பதிகளுக்கு விசித்ரவர்ணமான மேற்கட்டி கட்டினதுபோல் விளங்காநின்றதென்று ஒரு உத்ப்ரேக்ஷை தோற்றப் பேசினாராய்த்து. இப்படிப்பட்ட உத்ப்ரேக்ஷைக்கு ஆஸ்பதமான சோதியானது உங்கட்கு ஸௌஸ்வஸ்த்யத்தைத் தந்திடுக.

இதில், 'ஸ்யாமம்' என்றும் 'நீலம்' என்றும் இரண்டு பதங்கள் உள்ளன; "க்ருஷ்ணநீலாஸித ஸ்யாம காலச்யாமல மேசகா:" என்ற

அமரகோசத்தின்படி இரண்டையும் பர்யாயபதமாகக் காணும் வர்கள் பாநுஶப்தஸந்தேஹிப்பார்கள். அங்ஙன் ஶங்கிக்கவேண்டா; அந்த அமரகோசந்தன்னிலே நாநார்த்தவர்க்கத்தில் “த்ருஷ்டிப்ரதேஶ ஹரித்ருஷ்ண” என்றிருப்பது அறியத்தக்கது.* பாசியின் பசும்புறம் போலு நீர்மை இங்கே ஶ்யாமஶப்தத்தால் விவக்ஷிதமென்க. [பஹ்ரு] நீலஶ்யாமவர்ணத்தை பஹ்ருவர்ணமென்பர்கள். ஸா தஶாநநஜ்யோதிஸ்ஸின் இயற்கையான நிறம் இதுவாம். [ஶேஷஸ்ய] “சென்றால் குடையாம்” இத்யாதிப்படியே ஸகலாவஸ்தைகளிலும் கைங்கர்யநிரதனை திருவனந்தாழ்வானுடைய வெண்மை. தேஜோ த்ரவ்யவிஶேஷமிறே அவனது. ... ... (௫)

ஶம்ஸந்த்யுதர்கமுத்வாஸிதபரமஹஸோ ஸவிது: கைட-
பாரே:, உதேஷ்யச்சம்ஸீ ஸந்த்யேவ நக்தஞ்சரவிஜயகரீ யா ஜகத்வந்தநீயா ।
ப்ரத்யக்ஷாயப்ரத்யக்ஷவிஷயதமஸ்ஸர்வஜ்ஞைஶ்வர்யநீதஸா, ரதாங்கீ
ரஶ்மிஶ்ரீ: ப்ரணதஶ்ரேயஸே தாஸ்து ப்ரஸத்யோதாநதேஶ: ॥ ௬ ॥

ரதாங்கீ — திருவாழியாழ்வானுடையதான

யா ஜ்வாலஶ்ரீ: — யாதொரு ஜ்வாலாஶ்ரீயானது

உத்வாஸிதபரமஹஸ: ஸவிது: — சந்திரன் முதலிய மற்ற க்ரஹங்களினுடைய தேஜஸ்ஸைக் கவளீகரித்திருக்கின்ற ஸூர்யனுடைய

உதேஷ்யச்சம்ஸீ — உதயத்தைத்தெரிவிக்கின்ற

ஸந்த்யேவ — ப்ராதஸ்ஸந்த்யை போல

உத்வாஸிதபரமஹஸ: கைடபாரே: — இதர பதார்த்தங்களெல்லாவற்றினுடையவும் தேஜஸ்ஸை இல்லை செய்திருக்கிற எம்பெருமானுடைய

உதர்கம் — ப்ரஸாதாதிஶயத்தை

ஶம்ஸந்தீ — விளங்கச் செய்யாநின்றதாய்,

நக்தஞ்சரவிஜயகரீ — இரவில் திரிகின்ற துஷ்ட ஜந்துக்களுடையவும் (2.) ராக்ஷஸர்களுடையவும் நாஶத்தைச் செய்யாநின்றதாய்

ஜகத்வந்த்யா	எல்லாவுலகத்தாலும் உபாஸிக்கத் தக்கதாய்
பந்தூகச்சாய பந்து[illegible] வபுஷ்[illegible]	கோங்கு மலர்களின் காந்தியோடொத்த காந்தியோடு சேர்ந்த வர்ணங்களினால் பெருக்கமுற்ற
ஸந்த்யா	விளங்குகின்றதோ [தாய்
ஸா	அந்த ஸுதர்ஶந ஜ்வாலையானது
அவதாம்	உங்களுடைய
ப்ரத்யஹோத்பந்நம் ஏந:	நாள்தோறுமுண்டாகும் பாபத்தை
ப்ரணுததாம்	போக்கடிக்கவேணும்.

திருவாழியாழ்வானுடைய ஜ்வாலாவலியை ப்ராதஸ்ஸந்த்யையோடு ஒப்பிட்டுப் பேசுகிறார் ச்லேஷஶக்தியாலே. ஸந்த்யையானது [உத்³பா⁴ஸிதபத³வீ[illegible] ஸாவித: உந்மேஷம் ப்ரஸஜ்ஞீ =] உதார தேஜ: பதார்த்தங்களினுடைய ஒளியை யெல்லாம் உள்ளடக்க வல்ல ஸூர்யனுடைய உதயத்தைத் தெரிவிக்குமாபோலே ஸுதர்ஶநஜ்வாலையானது [உத்³பா⁴ஸிதபத³வீ[illegible]: கைடபாரே: உந்மேஷம் ப்ரஸஜ்ஞீ =] ப்ரதிபக்ஷிகளின் தேஜஸ்ஸையெல்லாம் க்ஷயீகரிக்கவல்ல ஸ்ரீரங்கநாதனுடைய உத்கர்ஷமுண்டு-[illegible]; அதனை விளக்கா நிற்கும். [நக்தஞ்சரவிஜயஶ்ரீ] இரவில் திரியும் க்ரூர ஜந்துக்களெல்லாம் ப்ராதஸ்ஸந்த்யை வந்தவாறே உள்ளடங்கும்; நக்தஞ்சரர்களான அஸுரராக்ஷஸர்கள் ஸுதர்ஶநஜ்வாலையைக் கண்டவாறே நாஶமடைவர்கள்.

[ஜகத்வந்த்யா] "ஸந்த்யாமுபாஸதே" என்று உலகெல்லாம் வணங்குமிறே அதை; இங்கும் "வடிவார் சோதிவலத்துறையுஞ் சுடராழியும் பல்லாண்டு" என்னாதாருண்டோ?

[பந்தூகச்சாயயாராஜி.] ப்ராதஸ்ஸந்த்யாகாலத்திலே ஸூர்யனுடைய செவ்விய சோதிகள் எங்கும் பரவுகையாலே [illegible]ராஶிகள் தமது கரிய நிறம் மாறிச் செம்மைபெற்று விளங்கும். ஆனபின்பு, பந்தூகபுஷ்பங்களின் சோதியோடொத்தசோதி

யாகின்றன்றோ ப்ராஹ்நிக ஸந்த்யையுடைய சோதி, அதனோடு கலசிச் செவ்வியவாகி விளங்குகின்ற மேகங்களாலே நிபிடமாயிருக்கும் ஸந்த்யை; ப்ராதஸ்ஸந்த்யையும் இப்படியேயிராநின்றதாய்த்து;—வைத்ருதவ்ருக்ஷத்தின் சோதிபோன்ற சோதியையுடைய ஸூர்யகிரணங்கள் மற்ற ஸகல தேஜஸ்ஸுகளையும் திரஸ்கரித்துத் தாமே வீறுபெற்று எங்கும் பரவுகின்றமையால் காளமேகங்களும் தம் நிறம் கெட்டு இந்தச் செந்நிறத்தையே கொண்டனவாகி விளங்குதல்பற்றி, ஸாயந்தநமாய ஸாயம்ஸமயவிவக்ஷிதங்களான ஸந்த்யைங்களாலே ஸஹஸ்ராம்ஶுதையாயிற்று ப்ராதஸ்ஸந்த்யை. இத்தால், மேகங்களை சிவக்கடிக்கவல்ல சோதிப்பெருமை ஸூர்யகிரணங்களுக்கு உள்ளவாறு சொல்லிற்றாயிற்று. இப்படிப்பட்ட ஸூர்யஜ்யோதிஸ்ஸானது [ஸவிதாரம் ப்ரத்யேத நேந: ப்ரணோதா.] ஸந்த்யையோடு ஸூர்யம் சொன்னது போலவே காயத்ரியிலும் ஸூர்யம் திருவுள்ளம் பற்றுகிறார்; "தத் ஸவிதுர் வரேண்யம்......பர்கோ தேவஸ்ய தீமஹி...தியோ யோ ந: ப்ரசோதயாத்" என்று அது செய்யும் நித்யாவநிவர்த்தநமாகிற காரியத்தையே இதுவும் செய்யக்கடவதென்கிறார். ஸாயந்தநம் ஸாயம்—ஸாயந்தநாய, என்றாகும். "ஸாயம்ஸாயம்" இதி பாணிநிஸூத்ரம்........

ஸூர்யம் ப்ரதீப்ய ப்ரக்ருதிப்ரக்ருஷ்டம் ப்ரதயதி ஸஹஸ்ராம்ஶுகாநாம் காநி, ஸௌவர்ணீம் யாந்தி காந்திம் ஶ்ரயதி ப்ரத்யூஷமேவ ஸந்த்யாராகம் ஸாந்த்ரம்। ஸம்ரக்ஷ்யமாணா ஶோகாம் ஹரதி ஶிதநிஶாவஸாநம் ப்ரத்யூஷஸாந்த்ரம், தாபாவதம்ஸவர்ஷம் ப்ரணமத நிஜம் பாது வஸ்ஸுதர்ஶநோதாத் ॥ (௭)

ப்ரத்யூஷஸமயே	யாதொரு ஸுதர்ஶந ஜ்வாலை
	இளருங்காலத்தில்
நப:	ஆகாசமானது

த்யௌர்தூமௌகதூம்ரா	புகைத்திரளின் ஸமுதாயத்தோடு
ஸாத்ம்யம் அப்யேதி	ஒற்றுமையைத் தெரிவித்துக்கொள்ளுகின்றதோ,
தாரகாஜாலகாநி	நக்ஷத்ரஸமூஹங்களானவை
ஸ்பௌலிங்கீம் காந்திம் யாந்தி	தீப்பொறிகளினது ஒளியை அடைகின்றனவோ,
மேரு:	மேருமலையானது
அங்காரஶங்காம் திஶதி	கொள்ளிக்கட்டையென்கிற ஶங்கையைத் தருகின்றதோ,
அக்நி:	அக்நியானது
நிர்வாணார்சி:	ஒளிமழுங்கப்பெற்றதாய்
வைவர்ண்யம் பஜதி	(ஸுதர்ஶந ஜ்வாலையிற் காட்டில் வேறுபட்டு விளங்கமுடியாதபடி அத்தோடு) ஒற்றுமையை அடைந்துவிடுகிறதோ,
சீநசந்த்ராவபௌ	ஸூர்ய சந்திரர்கள்
க்ஷீணதேஜஸௌ	தேஜஸ்ஸை இழந்தவர்களாய்
ஜ்வாலாவர்த்தாவிவ ஸ்த:	ஜ்வாலையின் வட்டம்போல இருக்கின்றனரோ,
தத்	அப்படிப்பட்ட
ப்ரஹரணபதிஜம் தாம	திருவாழியாழ்வானிடத் துண்டான தேஜஸ்ஸானது
வ: ப்ரீணாது	உங்களை ஸௌக்கியப்படுத்துக.

திருவாழியாழ்வானுடைய சோதி கிளருங்காலத்து மற்ற தேஜ:பதார்த்தங்களெல்லாம் ஒளிமழுங்கி கலங்குமாம் படியைப் பேசுகிறார் இதில். பலபல தேஜ:பதார்த்தங்கள் நிறைந்து விளங்குகின்ற ஆகாஶமண்டலமானது சக்ரஜ்வாலையின் முன்னே ஒளிகெட்டு 'இது புகைக்கூண்டு' என்னும்படியான நிலைமையை அடைகின்றது; நக்ஷத்ர ஸமூஹங்களெல்லாம் 'இவை க்ஷுத்ரமான நெருப்புப் பொறிகளாம்' என்னவேண்டும் நிலைமையை யடைகின்றன. மேருமலையானது 'இது அங்காரமோ' என்று ஶங்கிக்கும்படியாகின்றது. அக்நி

ப்ரூடமான க்ஷேத்துக்கும் சுழ்ந்தஸம்க்ரமமான க்ஷேத்துக்கும் நஷ்டப்ரீதமான க்ஷேத்துக்கும் க்ஷயமென்று பெயருண்டு. இவற்றுள் ஏதேனுமொரு பொருளை இங்கே கொள்க. சூரியனானது தனது ஒளியெல்லாம் மழுங்கப்பெற்று ஸுதர்ஸநஜ்வாலையில் ஸந்தாபத்தை அடையுமத்தனை யொழியத் தானொரு தேஜஃபதார்த்தமாகத் தனித்து விளங்கப்பெறாது. இனி ஸூர்ய சந்த்ரர்களோ வென்னில்; தங்களுடைய தேஜஸ்ஸு போனவழி தெரியாமல் ஒளியிழந்து, சிறுவர்கள் மாவலியாடும்போது தீவட்டம் காணப்படுமே அதுபோலவாகாநின்றார்கள்.

இப்படியாலே ஸகல தேஜஃபதார்த்தங்களையும் உருவழித்து எங்கும் மேம்பட்டு விளங்காநின்ற ஸுதர்ஸந ஜ்யோதிஸ்ஸானது உங்களை மகிழ்விக்கவேணுமென்றாயிற்று.

[ப்ரஸ்ர்யா] ப்ரஸ்ராணாம் ஸமூஹ꞉—ப்ரஸ்ர்யா. அதிநவ ப்ரகரணத்தில் "பாஶாதிப்யோய꞉" என்ற ஸூத்ரம் இதற்கு நிஷ்பாதகம். பாஶ்யா, த்ருண்யா, வந்யா, வாத்யா, ரத்யா இதிவத்॥ "தாரகாஜாலகாநி" = நக்ஷத்ர ஸமூஹங்களென்று பொருள்கொண்டால் ஜாலஸப்தம் ஸாமூஹ்யவாசி என்று கொள்ளவேணும்; அன்றியே, "க்ஷாரகோ ஜாலகம் க்லீபே கலிகா கோரக꞉ புமாந்" என்ற அமரகோஸத்தின்படி பொருள் கொண்டால், 'புதிய அரும்புபோன்ற நக்ஷத்திரங்கள்' என்று கொள்ளலாம். ஸூர்யஜ்ஞாநாதீயம்—ஸௌரஶ்ரீ. ... ...(எ)

ப்ரத்யுஷப்ராயிவேத்யாஃ சக்ரம் விகஸநஜபாஸந்நிகாஶம் ஸகாஶாத், ஸ்வஸ்தாநஸ்தாநரேகாஸ்புடிதி ககயநாபதோ தேஹதோஜஸ்ய நிஷ்கோதேயந் நிஷ்யதேதோ வியாதீவ ஸஹ ஸாலங்காரஷ்டாப்த்யாவி நேஷ்டே, ஸம்ப்ராம்ஸாம் ஸதோ வ்யக்தாநி ஹிதவிஹிதயே ஸாந்தவோ ஸாத்வநா வ꞉ ॥ (அ)

விகஸநஜபாஸந்நிகாஶம் } அப்போதலர்ந்த ஜபாபுஷ்பத்தோ
சக்ரம் } டொத்த திருவாழியாழ்வான்

அம்ப₃ரே த்₃ருஷ்டவதி	ஆகாசத்தில் காணப்பட்டவளவில்
ஸ்வர்பா₄நௌ	ராஹுவானவன்
"ஏஷ: பா₄நு: ஸ்வயம்" இதி ஹர்ஷாத்	"இதோ தென்படுகின்ற இப்புருஷன் ஸூர்யனேயாவன்" என்று நினைத்தவனாய் [ஹர்ஷத்தாலே]
வேக₃த:	வேகமாக
அஸ்ய ஸகாஶமாக₃த:—	இத்திருவாழியாழ்வானுடைய அருகே வந்தவனாய்
(அவ்வளவில்)	
யை:	எந்த ஸுதர்ஶநகிரணங்களினாலே
நிஷ்டப்தஸ்ஸந்	மிகவும் தபிக்கப்பட்டவனாகி
நிவ்ருத்த:	திரும்பிப்போனவனாய்
அத்₃யாபி	இன்றளவும்
ஸஹஸ்ராம்ஶும்	ஸூர்யனை
விது₄ரிவ	சந்திரனைப்போல
ஸஹஸா ஸ்ப்ரஷ்டும்	சீக்கிரமாகத் தொடுவதற்கு
ந ஈஷ்டே	அஸமர்த்தனாயிராநின்றானோ,
தே	அப்படிப்பட்ட
பா₄ஸ்வரா: பா₄நவ:	மிக விளங்குகின்ற ஸுதர்சநகிரணங்களானவை
வ:	உங்களுடைய
அஹிதவிஹதயே	ஶத்ருவிநாஶத்தின் பொருட்டு
ஸந்து	ஸமர்த்தங்களாயிடுக.

உலகத்தில் சந்த்₃ரக்₃ரஹணம், ஸூர்யக்₃ரஹணம் என்ற இரண்டனுள் ராஹுவுக்குச் சந்திரன் பிடிபடுவது சீக்கிரமாகவும் ஸூர்யன் பிடிபடுவது விளம்பமாகவும் நிகழ்வது வழக்கம்; இதற்கு ஒரு ஹேதுவை உத்ப்ரேக்ஷிக்கின்றமுகத்தாலே ஸூர்யனுடைய தேஜஸ்ஸின் ப்ரதாபாதிஶயத்தைப் பேசுகிறார். அப்போதலர்ந்த ஜபாபுஷ்பம்போல் செக்கச்செவேலென்றிராநின்ற திருவாழியாழ்வானை ஒருகால் ஆகாஶத்திலே கண்ட ராஹுவானவன் 'இதோ ஸூர்

யன் கிடைத்துவிட்டான்; இவனைப் பிடித்துக்கொள்வோம்' என்றெண்ணி ஸ்வைரப்ரசாரியாலே ஸுதர்ஸநாழ்வானருகே விரைந்தோடிவந்தானும்; உண்மையில் அந்த வ்யக்தி ஸூர்யனல்லாமல் திருவாழியாழ்வானாயிருந்தபடியாலே அவருடைய கிரணங்களாலே நன்கு தபிக்கப்பட்டு மீண்டொழிந்தவனை அந்த ராஹுவானவன் அதற்குப் பிறகு மெய்யான ஸூர்யனிடத்தில் போவதற்கும் அஞ்சி 'இவன் ஸூர்யனேயாவன்' என்கிற நிஸ்ஸம்ஸயவிஷயமான நிஸ்சயத்தைப் பெற்றபின்பே இவனருகே போகலாமென்றெண்ணி, சந்திரனை எப்படி ஸீக்ரமாகப் பிடிக்கிறானோ அப்படி ஸூர்யனைப் பிடிக்கமாட்டாமல் விளம்பியாநின்றானென்று ஹேதூத்ப்ரேக்ஷையிருக்கிறபடி. எனவே, ராஹுவுக்கு ஸஹ்யமான ஸூர்யப்ரதாபம்போலன்றிக்கே ஸுதர்ஸநப்ரதாபம் அவனுக்கு ஸர்வதாஅஸஹ்யமாயிற்றென்றதாய்த்து. இப்படி ஸூர்யனிற்காட்டிலும் அதிஸயிதப்ரதாபவராய் விளங்காநின்ற திருவாழியாழ்வானுடைய கிரணங்களானவை உங்களுடைய பகைவர்களைப் பாற்றவேணும்.

வ்ருத்தி — அயிவ்ருத்தே ஜாதி விஸங்க்யேயைர்வ்யயீபாவ:. ஜவா = செவ்வரத்தை. நிஸ்ஸேஷம் யதா ததா தப்த: நிஷ்டப்த:. (அ)

தேவம் ஹேமாத்ரிதுங்கம் ப்ருதுபுஜஸிகரம் பிப்ரதம் மத்யதேஸே, நாபீவாபீஸரோஜோல்லஸிதநவநிபம் ஸேஷஸீர்ஷாஸநஸ்தம்। நேத்ரம் பத்மாயதாக்ஷம் தினகரகிரணாக்ருஷ்டவர்ணை: வஸீத்ர், ஸ்ரீசைத்ரவஸ்த்ராவாமாதய இவ விமலஸுதர்ஸநா திவ்யாஸ்த்ரபதி: ॥ (கூ)

ப்ருதுபுஜஸிகரம்	பருத்த புஜங்களாகிற சிகரங்களையுடையனாய்
ஹேமாத்ரிதுங்கம்	மேருமலைபோல் உயர்ந்தவனை
தேவம்	ஸுதர்ஸநபுருஷனை [ருப்பதும்
மத்யதேஸே பிப்ரதம்	நடுவிடத்தில் வைத்துக்கொண்டு
நாபீவாபீஸரோஜம்	நாபியாகிற தீவிகையிலே அழகிதாயிருப்பதும்

அராடவீமதீ	அரங்களாகிற காடுகளையுடையதும்
ஶேஷஶீர்ஷாஸநஸ்தா	திருவனந்தாழ்வானுடைய முடியாகிற ஆஸநத்தின்மீது இருப்பதும்
(அதவா) பூப்ராயஸூசீ	பூமியின் வேறொரு வடிவு படைத்ததுமான [ஸூசியோடொத்த]
நேமிம் பரீத்ய	நேமியைச்சுற்றி
விலஸந்தீ	விளங்கிக்கொண்டிருக்கிற,
திநகரகிரணாத்ருஷ்ட தேஶ: சக்ரவாலாசல இவ விஹித:	ஸூர்யகிரணங்கள் கண்டறியாத ப்ரதேஶத்தையுடைய[எல்லையையுடைய] லோகாலோக பர்வதம் போன்ற
ஶ்ரீமதஸ்த்ரரஶ்மி:	ஸ்ரீஸுதர்ஶநஜ்வாலையானது
வ:	உங்களுக்கு
ப்ரீத்யை சாஸ்து	ப்ரீதியின்பொருட்டு ஆயிடுக.

திருவாழியாழ்வானுடைய நேமியைச் சுற்றி அவருடைய ஜ்வாலை விளங்கும்படியைப் பார்த்தால் பூமியைச் சுற்றி லோகாலோக பர்வதம் விளங்குவதுபோல் உத்ப்ரேக்ஷிக்கலாம்படி யிருக்கையாலே அங்ஙனே உத்ப்ரேக்ஷித்துப் பேசுகிறார் இதில். நேமியை ஸூசியாக ரூபணம் பண்ணுவதற்கு இன்றியமையாத உபபத்திகள் பூர்வஶ்லோகத்திலே சொல்லப்பட்டன. "திநகரகிரணாத்ருஷ்டதேஶ:" என்ற விஶேஷணத்தால் லோகாலோக பர்வதத்தோடு ஶ்ரீமதஸ்த்ரரஶ்மிக்குள்ள ஸாத்ருஶ்யமும் நிர்வஹிக்கப்படுகிறது.

ஸூசி எங்ஙனேயிராநின்றதென்றால்; பெரிய சிகரத்தையுடைய மேருமலையைத் தன்னிடையே தரித்துக்கொண்டும், தீவு, காடு, முதலியவற்றை யுடைத்தாயும், திருவனந்தாழ்வானுடைய திருமுடியின்மீது உள்ளதுமாயிராநின்றது; ஶ்ரீஸுதர்ஶந நேமியும் அங்ஙனே யிராநின்றதோவெனில்; ஆம்; நேமிமத்யத்தில் ஸுதர்ஶந புருஷன் எழுந்தருளியிருப்பதானது மேருமலை திகழ்வதொக்கும். அப்புருஷனுடைய பருத்த புஜங்களானவை அம்மேருமலையின் பரிவாரஸ்தாநீயமாம். நாபியென்கிற அவயவம் தீவென்போன்றதாம்; அரங்களானவை காடுகள் போன்றுள்ளன; இனி விஶேஷ

ரீக்ஷாஸந்தேஹமும் ஒக்கும்; ஸாம்பபஞ்சாஶத்தில், அப்படிப் பட்ட ஸந்தேஹம் ஶாஸ்த்ரத்தாலும் ப்ரத்யக்ஷத்தாலுமிறே. இப் படிகளாலே ஸூர்யனின் ஸ்வரூபம் அப்ரமேயமாயிராநின்றதாய்த்து ரேமி. ஸூர்யனைச்சுற்றி லோகாலோகமென்னும் பர்வதவலயம் வி ளங்குவதும், அம்மலையில் * இரவியின் கதிர்கள் நுழைதல் செய்கறி யாத ஒரு பாகமுள்ளதும் புராணப்ரஸித்தம். திவ்யாஸ்த்ரபூமிக்கு அம்மலையோடு ஸாம்யம் ஸாத்ருஶ்யத்தாலே வரக்கடவதத்தனை. 'திநகரகிரணை: அத்ருஷ்டா ஸீமா யஸ்யா:' என்கிற விக்ரஹம் உபயபக்ஷத்திலும் ஒக்குமாகிலும் பொருளில் வாசியுண்டு. அத்ரு ஷ்டபக்ஷத்தில் ஸீமாஶப்தத்திற்கு ஸ்தலமென்று பொருள்; ஸூர் யகிரணங்களாலே பார்க்கப்படாததொரு இடத்தையுடையது அது. திவ்யாஸ்த்ரபூமியோவென்னில்; ஸூர்யகிரணங்களால் காணப்படாத எல்லையுடையது; ஸூர்யகிரணங்களாலும் எல்லைகாணமுடியாத தென்றபடி. உத்தரஜ்ஞபக்ஷத்தாலும் ஸ்வரூபமஹத்வமென்றால் அதவே க்ஷயாவ்யாப்தாதரும் என்றதாமிறே.

இப்படிப்பட்ட ஸூர்யபிம்பஜ்யோதிஸ்ஸானது உங்களுக்கு நித்யஸௌக்யக்ஷேமமாகக் கடவதென்றதாயிற்று. ... (௬)

ஸகலம் லோகஸ்ய சக்ஷுர்த்விவிதகர்மநிர்தாஹகம் த்ரிநேத்ர
த்ரிநேத்ரம், ஸாத்யம் ... ஸாத்யோபாஸ்யமானம் ...
... ஷட்விம்ஶத்ய । ஸ்தோத்ரவிஶேஷவிஶேஷ பக்ஷநவகிரண
ஶ்ரேணி ரஜ்யத்ஸாமஸ்து, பயஸ்யாதஸாமத்ர பலவத்ப்ரஶம
ஜ்யோதி ரீஶஸ்ஸஹஸ்ரம் ॥ (௭)

லோகஸ்ய ஸகலம் சக்ஷு:	உலகத்துக்கு முக்கியமான கண் போன்றதும்
த்விவிதகர்மநிர்தாஹகம்	புண்யபாபரூபமான இருவகைக் கருமங்களையும் போக்கடிப்பதும்
த்ரிநேத்ரம்	முக்கண்ணனான சிவபிரான் வணங்கப் பெற்றதும்

சதுர்ணாம் அர்தாநாம் தாதா	நான்கு புருஷார்த்தங்களையும் அளிப்பதும்
அரிகணம் பஞ்சதாம் ப்ராபயத்	பகைவர் கூட்டங்களை நாசமடைவிப்பதும்
ஷட்குணாட்யம்	(ஞானம் ஶக்தி முதலிய) ஆறு குணங்கள் நிறையப்பெற்றதும்
ஸப்தார்சி:ப்லோஷிதாஷ்டாபத நவகிரணஶ்ரேணிரஞ்ஜ்யத் தசாசம்	தீயில் காய்ச்சப்பட்ட ஸ்வர்ணத்தினதுபோன்ற புதிய கிரணஸமூஹத்தால் சிவக்கின்ற பத்துத் திசைகளையுடையதுமான
ஶதாங்காவயவவரிஷ்ட ஜ்யோதி:	ஸ்ரீ ஸுதர்சந ஜ்யோதிஸ்ஸானது
வ:	உங்களுடைய
ஸஹஸ்ரம் அம்ஹ:	பலபல துன்பங்களையெல்லாம்
வ்யபோஹ்யாத்	தொலைத்தருள்க.

இந்த ஶ்லோகத்தில் 'ஏகம், த்வி, த்ரி' என்று ஒன்று முதல் பத்துவரையிலுள்ள எண்களுக்கும் நூறு ஆயிரம் என்னும் எண்களுக்கும் வாசகமான பதங்களின் விந்யாஸக்ரமம் நோக்கத்தக்கது. இந்த ஶ்லோகத்தைக் கடாக்ஷித்தே ஸ்ரீவேதாந்த தேசிகனும் ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் (5) 'ஏகோவிசேஷாத்விதீய த்ரிபதசதுர விந்த பஞ்சவர்ணீப்ரஹஸ்தம் ஷாட்குண்ய ஸேவ்ய ஸப்தஸ்வரமதிரணிதா ஷ்டஸங்கநவாத்மா। தேவோதவீப்ரஸாரிதப்ரமதநயநாரதி ஸாஹஸ்ரமத்யேக்ஷ விப்ரக்ஷதக்ஷகோடிவிப்ரவட்யதாஹயம் விதஸம்வேத்யதேயோட:॥" என்ற ஶ்லோகத்தை யருளிச்செய்தார். இவர் ஆயிரத்தோடு நிறுத்தினார்; அவர் அதற்குமேலும் பேசினார் என்று வாசி காண்க.

இதில் "அரிகணம் பஞ்சதாம் ப்ராபயத்" என்றவிடத்தில் ஐந்து என்ற எண்ணுக்கும் "நவகிரணஶ்ரேணி....." என்றவிடத்தில் ஒன்பது என்ற எண்ணுக்கும் பொருள்வகையில் தோற்றமில்லையாகிலும் ஶ்ருதிஸாத்ருஶ்யத்திலே ஶப்தத: ஸம்வ்யாப்தி உண்டாகுமென்கிறவத்தனையே விவக்ஷிதம்; திருவெழுகூற்றிருக்கையிலும் இப்படியே யிருக்கக் காண்கிறது.

[த்3விவித4ம் க்ஷிணோதி கவசாம்ஸ] புண்யபாபரூபமான இருவகைக்கருமங்களையும் தொலைப்பது என்கை; பாபத்தைத்தான் தொலைக்கவேணும், புண்யத்தையும் தொலைக்கவேணுமோ வென்னில்; ஆம்; பாபம் நரகாவஹம்; புண்யம் ஸ்வர்கா3தி3 க்ஷுத்3ரப2லாவஹம். ஒன்று இரும்புவிலங்கு; ஒன்று பொன்விலங்கு. "ததா3 வித்3வாந் புண்யபாபே விதூ4ய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" என்னுமதிகாரிக்கு இருவினைகளும் தொலையவேணும்: "சார்ந்த இருவல்வினைகளும் சரித்து" என்றார் ஆழ்வாரும்.

[ஶதாங்கா3வயவவரிஷ்ட2ஜ்யோதி:] "ஶதாங்க3ஸ்ஸ்யந்த3நோ ரத2:" என்ற அமரகோஶத்தின்படி ஶதாங்க3ஶப்33ம் ரத2வாசகம்; அதனுடைய அவயவங்களில் [வரிஷ்ட2ம்] சிறந்தது—சக்கரம். [ஈதிஸஹஸ்ரம்]. "அதிவ்ருஷ்டிரநாவ்ருஷ்டிர்மூஷிகா: ஶலபா4: ஶுகா: | அத்யாஸந்நாஶ்ச ராஜாந: ஷடே3தா ஈதய: ஸ்ம்ருதா:" என்று ஈதிகள் விஶேஷித்துச் சொல்லப்பட்டிருந்தாலும் இங்கே ஸர்வாநர்த்த2மும் விவக்ஷிதமென்க... ... ... (௧௦)

உத்33ண்டே3 யத்3விதண்டே3 நிருந்த4தி நப4ஸ்ஸ்ரோதஸ்யம்ஶுமாலிந்யூர்த்4வம், த்ர்யக்ஷஸ்ய பூ4யஸ்தாவஸு2விதவத3நோ விஶ்ரு தீர்ஷ்வஜ்ஞக்ஞ:| யஸ்ய த்3ருஷ்ட்வாதி3யோஷா விதா4ரவதோ நக்ஷத்ரகோஶஸ்ய ஸாத்4ய, ரக்ஷஸ்ஸ்வஹோஷ்ட்ரு ஹிதம் ஸாஹிதவ்யாஷ்டயோ வ்ருஷ்டயோ வ: || (௧௧)

உத்33ண்டே3 — (பகைவர் திறத்தில்) மிகவும் தீக்ஷ்ணமான

யத்3விதண்டே3 — யாவை சில ஸூர்யகிரணங்களின் ஸம்பந்தமானது

நப4ஸ்ஸ்ரோத்யம் — ஆகாஶமத்யத்தை

நிருந்த4தி ஸதி — நெருக்கா நின்றவளவில்

அம்ஶுமாலீ — ஸூர்யனான

ப்லுஷ்டதாபவ்யதிதவபுஷம்	மிக்க தாபத்தினால் வாட்டப்பட்ட வடிவையுடையவனைக்கொண்டு
அம்ப:ப்ருத்பி: அப்ரவப்ரை:	ஜலத்தை ஏந்திக்கொண்டிருக்கிற மேகவப்ரங்களில்
அப்யஸ்ய	அடிக்கடி அவகாஹித்து
த்யாம் அடதி	ஆகாயத்தில் ஸஞ்சரிக்கிறானே,
விதா:	சந்திரனானவன்
ஶோஷ்யத்ஸுதௌக:	உலர்ந்துபோன அம்ருத ப்ரவாஹத்தையுடையனாய்
அபேதந: க்ஷௌத்ரகோஶஸ்ய	தேனற்ற தேனடையினுடைய
ஸாத்ருஶ்யமேதி	ஒப்பை அடைகின்றானே,
சக்ரஸ்யோஷ்ணா:	திருவாழியாழ்வானுடைய
தே	அப்படிப்பட்டவையாய்
ப்ரதிதஸாவித்ரவ்ருஷ்டய:	ஸாரண்யஸ்ரீயைப் பண்ணவல்லவைகளான
ஹேதய:	கிரணங்களானவை
வ: ரக்ஷந்து	உங்களைக்காத்தருள்க.

வளரொளிய கனலாழியின் ஜ்வாஜாலமானது ஆகாஶத்தை அளாவி எங்கும் பரந்தவளவில் அதனுடைய தாபம்பட்டு மிகவும் வாட்டமடைந்த ஸூர்யன் தாபஶாந்திக்காக நீர்கொண்ட மேகமண்டலங்களில் அடிக்கடி அவகாஹித்து அதனால் தாபம் தணியப்பெற்றுத் தனது தொழிலைச் செய்ய வல்லவனாகிறான். ஸூர்யனுடைய கதி இதுவாயிற்று: சந்திரனோ வென்னில், [ப்லுஷ்டதாபவ்யதிதவபு: என்ற விஶேஷணம் சந்திரனுக்கும் அந்வயிக்கக்கடவது.] தனது அம்ருதரஸமெல்லாம் ஶோஷமாகப் பெற்றவனாய்த் தேன் அற்ற தேனடைபோலும் நிலைமையை எய்துகின்றான். ப்ரஸித்ததேஜஸ்ஸர்களான சந்த்ரஸூர்யர்களை இப்பாடுபடுத்தவல்ல பெருமைவாய்ந்த ஸுதர்ஶந கிரணங்கள் உங்களைக் காத்தருளவேணுமென்றாராயிற்று. [ஓக:-ப்ரவாஹம். வ்ருஷ்டி:-ஸ்ரீ.] (கக)

[illegible] (௩௨)

[illegible]	வாவிகளின் தண்ணீரில்
[illegible]	செந்தாமரை மலர்களின் திரளாகவும்
[illegible]	மலைச்சாரலில்
[illegible]	யாகஜலங்களின் அருவி வீழ்ச்சியாகவும்
[illegible]	திசைகள்தோறும்
[illegible]	சிருஜங்களினுடைய
[illegible]	சிந்தூரப்பொடியாகவும்
[illegible]	ஆகாயத்தில்
[illegible]	அந்திப்போதை மேகத்திரளாகவும்
[illegible]	கடலில்
[illegible]	பவழமாகவும்
[illegible]	காட்டிடத்தில்
[illegible]	பல்லவமாகவும்
[illegible]	மனுஷ்யர்களாலே பார்க்கப்படாநின்ற
[illegible]	திருவாழிப்பாழ்வானது கிரணஸமூஹமானது
[illegible]	உங்களுக்கு
[illegible]	நல்ல அறிவைஉண்டாக்குக.

திருவாழிப்பாழ்வானுடைய ஜ்யோதிஸ்ஸமூஹம் ஸர்வவ்யாபியென்னுமிடத்தை ஒரு உத்ப்ரேக்ஷையாகப் பேசுகிறார் இதில். வாவித்தடம், மலைச்சாரல், ஆகாயம், கடல், காடு முதலான எல்லாவிடங்களிலும் திருவாழிப்பாழ்வானுடைய சுடர்ச்சோதிவெள்ளமே வியாபித்துக்கிடக்கின்றது; ஆனால் உண்மைகண்டறியகில்லாத ஸாது ஜநங்கள் "இவையெல்லாம் வாஸ்தவமான ஜ்யோதிஸ்ஸுக்களேயாம்"

என்று அறுதியிடமாட்டாமல் ஓரோரிடங்களில் ஓரோர்வஸ்துவாக மயங்குகின்றன: இந்த ஸூர்யப்ரகாஶத்தை வாவித்தடங்களில் தாமரைமலர்களாகவும், மலைச்சாரல்களில் காவிநீர்ப் பெருக்காகவும், வ்ருக்ஷங்களிடத்தில் சிந்தூரச்செம்பொடியாகவும், ஆகாயத்தில் ஸந்த்யாராகமாகவும், கடலினுள் பவழமாகவும், கோட்டத்தில் செந்தளிராகவும் ஜனங்கள் காண்கின்றனர். (மன்னியறிவில்லா ப்ராக்ருதர்கள் இங்ஙனே ப்ரமிக்கமாட்டார்கள்; விஷ்ணுவும், ஸ்ரீவராஹமும், ஸிம்ஹமும், ருத்ரமும் முதலானவற்றை ஸ்வரூபபேதமாகவே காண்பார்கள்—என்பது உள்ளுறை) இஃது அதிஶயோக்தி.

க்ரியாபதத்தில் 'ஜயா' என்பதனால் 'ப்ராப்தே' என்றதை அனுஸந்தித்துப் பொருள்மாத்திரம் வேறாகக் கொள்ளத் தக்கது. "ப்ரவாளோ பஸ்த்ரிகஸலய வீணாதிஷ்வேவ விக்ரமே" என்ற நிகண்டுவின்படி ப்ரவாளஶப்தத்துக்கு தளிரென்றும் பவழமென்றும் பொருளுண்டாதல் உணரத்தக்கது.

"ஸ்ரீயிஷ்டாவ்ய ப்ரமோதே" என்றும்......ப்ரபோதய என்றும் பாடமுண்டு. ப்ரமோத:—ஸந்தோஷம். ப்ரபோத:—சிறந்த ஞானம். [ஸுதர்ஶநஷிணே] ஸுதர்ஶநேஷ்ணு என்று எம்பெருமானுக்குத் திருநாமமிருப்பதுபோலவே திருவாழியாழ்வானுக்குமுண்டு. த்விஷாம் ஸந்தோஹ ப்ரத்வேஷ:; ஸ ஸமாவஸதாஸ்மி ஸ்நேதி விக்ரஹ:. அதவா—த்விஷாம் ஸந்தோஹ: த்வேஷ்டா; தஸ்யாராஸி: என்பாருமுண்டு: ஸமூஹத்தினுடைய ஸமூஹம் என்பதனால் பாஹுல்யாதிஶயமே தோற்றும். ... ...(கஉ)

ஹரிந்ரா! ஹாநோ தத்தீயா ஸாஸி கரோஷீதீதே! ஜக்த ஜநஜநீஜக்த! ஹரிரூதோஷ ஸந்தோஹநய! ந ஸ்வத: ப்ரபத்ரஷோதிஷ்ட:! ஸம்ஸாதீதம் நஹ: ஸ்வா யஹாயஹயந்திஜிய வக்ராவாஸபவர்ஷ்டி, ஸூர்யாகம் ப்ரஶமகாஹவாய் ப்ரஸ்ஸ்ஹா வக்ராய க்ரதீதிஶோ (கங)

யதுதயஸமயே	எந்த ஸுதர்ஶநகிரணங்களின் உதயகாலத்தில்
நாபஸ்யா:	ஆகாசத்திலுள்ள தேவ ஸ்த்ரீகள்
'ஹே பாநோ! க்வயாதா: ப்ரோஷ்யந்தி'	'ஓ ஸூர்யனே! உனது தேஜஸ்ஸானது (ஸுதர்ஶந தேஜஸ்ஸின் முன்னே) விளங்கவில்லை (என்று ஸூர்யனை நோக்கியும்)
'ஹே ஶீதாம்ஶோ! தே தேஜ: க்வ நு?'	'சந்திரனே! உனது தேஜஸ்ஸு எங்கே?' (என்று சந்திரனை நோக்கியும்)
'ஹே தாரா: தூரதஸ்த'	'நக்ஷத்திரங்களே! தூரத்தில் நில்லுங்கள்' (என்று நக்ஷத்திரங்களை நோக்கியும்)
'அக்நே! ஶாந்தோஸி'	'அக்நிபகவானே! சப்பையாய்விட்டாயே!' (என்று அக்நியை நோக்கியும்)
'ஹே வஜ்ரஜ்யோதி:!	'ஓ வஜ்ராயுதத்தினது தேஜஸ்ஸே!
பவத:	உனக்கு
ஸ்வாதந்த்ர்யம் ந'	தனித்து விளங்கக்கூடிய ஸ்வாதந்திரியமில்லை (என்று வஜ்ராயுத தேஜஸ்ஸை நோக்கியும்)
இத்தம் ஶம்ஸந்தி	இவ்வாறாகச் சொல்லுகின்றனரோ,
தே	அப்படிப்பட்ட பெருமைவாய்ந்த
சக்ரராஜாம்ஶவ:	திருவாழியாழ்வானுடைய கிரணங்கள்
யுஷ்மாகம்	உங்களுடைய
ப்ரஸ்ருததாபத்ரயப்ரஸவபவமஹாரோகசாந்த்யை	ப்ரஸித்தமான தாபத்ரயாதிகட்கு உத்பத்திஸ்தானமாகிய ஸம்ஸாரமாகிற நோய் தீர்வதன்பொருட்டு
க்ரமந்தாம்	பராக்ரமிக்கட்டும்.

– கீழ் ஏழாவது ஶ்லோகத்தில் ப்ரதிபாதித்த அர்த்தத்தையே ப்ரகாராந்தரத்தாலே இதிலும் அருளிச் செய்கிறார்.

திருவாழியாழ்வானுடைய கிரணங்கள் கிளரும்போது, ஆகாசத்தில் திவ்யவிமாநவாஸிகளான தேவஸ்த்ரீவர்க்கங்கள், ஸூர்யன் சந்திரன் முதலிய தேஜ:பதார்த்தங்களை நோக்கி இங்ஙனே சொல்லுகிறார்களாம்:—அப்பா ஸூர்யனே! உனது ஒளி விளங்கமாட்டாமல் மங்கிப்போயிற்றுக்காண்; அப்பா சந்திரனே! உன் தேஜஸ்ஸு எங்கே புக்கொளித்தது? நக்ஷத்திர கணங்களே! இனி நீங்கள் அடக்க நிற்கவேண்டுமத்தனை; ஓ அக்நிஹவனே! உன்னை நாங்கள் பெருமதிப்பாக நினைத்திருந்தோமே; ஒளியற்றவனாய் சப்பையாய்விட்டாயே!; ஓ வஜ்ராக்நிதேஜஸ்ஸே! நீ ஸுதர்சநஜ்யோதிஸ்ஸில் லயித்து உருவழிந்துபோகும் பதங்கனாய் விட்டாயேயன்றி ஸ்வதந்த்ரதேஜோவஸ்து அல்லைகாண்; என்று நின்றார்கள் வஸ்துத: இப்படி சொல்லுகிறார்களோ வென்னில்; சொல்லாவிடினும் இங்ஙனே சொல்லவேண்டும்படியான நிலைமை விளைகின்றதென்கையிலே தாத்பர்யம். அப்படிப்பட்ட ஸுதர்சந கிரணங்கள் உங்களுடைய ஸகல து:க்ககாரணமான ஸம்ஸாரரோகத்தைத் தொலைக்கக்கடவன வென்றதாயிற்று. இரண்டாம் பாதத்தில் "தாரா: ஸ்பாராஸ்" என்றும் பாடம் வழங்கும். அப்போது, (கவி, ஸ்ப:,) ஸ்ப. என்று மணிப்ரவாளஸஹவசநமாம். அதிற்காட்டிலும் மொழிப்ரவாளஸஹவசநமேபொருட்சேர்த்திக்கும் சுக்ஷரார்த்தஸ்வாரஸ்யத்திற்கும் ஒக்கும். பெரியோர் ஓதும் பாடமும் இதுவே. வசயி—ஸ்தாக, ஸ்தூ, ஸ்த. என்று ரூபம்.

ஜ்யா கர்ணேஷு ப்ரதேவாத்ருஹிணபரிஷத்யாஸாக்ஷிஷு ஸ்வஸ்ய யோத்தாம், வீத்வா வாதாத்ருதாஸ்வ ஸ்வஷ்டிதார்ஷ்டாம் நாரதீசே நமோ வஸ்த்ராஞ்சலகால்ப்ரஸாதம் வ்ருஷ்டிதாநாம் துஹாநா:, ஷ்டிம் ஸ்வாபோகஸ்வாத்ர்யஸ்வந்தஸேஸ: ஸாநந்தாநாம் துதூநாம் ॥ (௧௪)

அரிவதூநாம் சத்ருஸ்த்ரீகளுடைய [அஸுர ராக்ஷஸமாதர்களுடைய]

காதுகளில் ([illegible]ங்களாலங்காரமாக அணியப்பட்டிருந்த)
அருகம்புற்களினை
தின்றுவிட்டும்
தேவமாதர்களுடைய
கண்களில் (பெருகிக்கொண்டிருந்த நீரை
குடித்துவிட்டும்
தருமநெறி வழுவாமல் திரிகின்றவையாயும், (பசுக்களின் பக்ஷத்தில்) 2. காளைகளோடு கூடத்திரிகின்றவையாயும்
ஸ்ரீகோவர்த்தனனெம்பெருமானின்
பின் செல்லப்பெற்றவையாயும்
அடுத்தவர்களுக்கு
சிறந்த க்ஷீரரஸத்தை (2) சிறந்த மோக்ஷருசியை
சுரந்து கொடுப்பவையாயும் (2) உண்டுபண்ணுகின்றவையாயும் இருக்கிற
ஸஹஸ்ராரத்தாலே மூவுலகிருளையும் விலக்கின திருவாழியாழ்வானுடைய கிரணங்களானவை, (2) தனது கடாக்ஷ வீக்ஷணத்தாலே மூவுலகத்தவரின் அஜ்ஞானாந்தகாரங்களைப் போக்கியருளும் கண்ணபிரானுடைய பசுக்களானவை
உங்களுக்கு
தொடர்ச்சி அறுமல் ஸாஸ்வதமாயிருக்கக்கூடிய செல்வத்தை
தந்திடுக.

திருவாழியாழ்வானுடைய கிரணங்கள் உங்கட்குத் தொடர்ச்சியாக செல்வத்தைத் தந்திடுக வென்கிறார். "கௌஸ்துபம் வைஜயந்தீ ச ஸுதர்சன கிரணாஸ்ததா | ஸ்ரீவத்ஸாங்க்ய விராமஸ்தேத் ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரிய:" என்ற மூலஸ்லோகத்தின்படி ஸுதர்சனத்திற்கு உள்ள பலபொருள்களில் பசு என்ற பொருளையும் கிரணம் என்னும் பொருளையும் ஏககாலத்தில் இங்கே விவக்ஷித்து 'கா:வ:' என்றருளிச் செய்கிறார். 'சக்ரஹஸ்த:' என்னும் பதம் 'சக்ர லக்ஷிதி:' என்ற வ்யுத்பத்தியால் கண்ணபிரானையும், 'சக்ரம் ஹஸ்தே யஸ்ய' என்னும் வ்யுத்பத்தியால் திருவாழியாழ்வானையும் சொல்லும். (சக்ரராஜ:, சக்ரவ்யூஹ: இதி த்ரிகாண்டசேஷ:) ஆகவே, "சக்ரஹஸ்தஸ்ய கா:வ:" என்ற வாக்கியத்தில், திருவாழியாழ்வானுடைய கிரணங்கள் என்ற பொருளும் கண்ணபிரானுடைய பசுக்கள் என்ற பொருளும் ஆகும்படியருளிச் செய்கிறார் ஸ்லேஷ அலங்காரத்தாலே. இரண்டிற்கும் பொருந்த விசேஷணங்களிடுகிற வைசித்ரியைப்பாரீர். [கவிஸாமர்த்யம் க்ஷணத்ருஷ்டாந்த விசேஷணைச்சக்ர ஹஸ்தஸ்ய தத்ர சக்ஷிஷே ச இதி கவிதா விசேஷ:] பசுக்கள் புற்களைத் தின்று தண்ணீரைக் குடித்துத் திரியும்; ஸுதர்சன கிரணங்களும் அப்படியே செய்கின்றன;—அஸுர ராக்ஷஸமாதர்கள் தங்கள் காதுகளில் ஸௌபாக்யசிஹ்னமாக அணிந்துகொண்டிருந்த அறுகம்புல்லைத் தின்றுவிட்டுத்—தேவமாதர்களுடைய கண்களிற் பெருகிக்கொண்டிருந்த பெருக்காறு போலான வாரித்தைப் பருகிவிட்டு ஸவிலாஸமாகத் திரிகின்றனவாம். இதனால் பெறப்பட்டதென்னென்னில்; அஸுர ராக்ஷஸர்கள் வியவைகளாம்படி அவர்களது ஸத்ருக்களையொழித்து, அவர்களால் நலிவுபட்டிருந்த தேவஜாதியின் துக்கத்தைத் தீர்த்தவை ஸுதர்சன கிரணங்கள் என்றதாகிறது. கழுத்தில் மங்கலஸூத்ரதாரணம் போலே காதில் தூர்வாங்குர தாரணமும் ஸுமங்கலிகளுக்கே உரித்தாம்; அது போயிற்றென்றால் வைதவ்யம் வந்தவாறுமத்தனை. ஸத்ருக்கள் செத்தபின்பு தேவ

மாதர் அழுவதற்கு ப்ரஸக்தியில்லாமையால் அவர்களுடைய கண்ணீர் ஸாரம்ருககிரணங்களால் பருகப்பட்டதாக உத்ப்ரேக்ஷிக்கப்பட்டது.

“ஸவ்ருஷம்” என்பது “வாஸஃ” என்ற வாக்யத்தையிலே விஶேஷணமாக அந்வயிக்கக் கடவது. [ஸவ்ருஷம் வாஸஃ] வ்ருஷபஶப்தத்திற்கு வ்ருஷபமென்றும் யூதமென்றும் இரண்டுபொருள், பசுக்கள் வ்ருஷபத்தோடே கூடித்திரியும். ஸாரம்ருக கிரணங்களானவை யூதத்தோடே ஸஞ்சரியாநின்றன. அதாவது —பாவிகளை நிரஸித்தலும் யாசகர்களைப் பாதுகாத்தலுமாம். சயபயாஸமறியாத எம்பெருமான்படியே இருக்குமாய்த்து தநாயாஸமும். [க்ஷீரேணவஸ்வேஷ சநாதாஃ] க்ஷீரோதவாஸனை எம்பெருமான் பின்செல்லப்பெற்றிருக்கை பசுக்களுக்கும் ஸாரம்ருககிரணங்களுக்கும் ஒக்கும். இவைபுகுமிடமெங்கும் எம்பெருமானும் புக்கு நிற்கிறானிறே ஸவத்ரைவரவிஷ்வஸ்ய சவிஶேஷாஃ॥

[ஶ்ருதாநாம் வாஶோதாஸம் ஶாஹாநாஃ] “சஶ்ரதம் யஜ்ஞேஶேஷஸ்யாத்யஶேஷஸர்வேஶதே। சயாவிசேவ சேகேஷ” என்ற நிகண்டுவசத்தின்படி சஶ்ரதஶப்தத்துக்குள்ள பல பொருள்களில், பால், மோக்ஷம் என்ற இரண்டு பொருள்கள் இங்கே விவக்ஷிதம். பசுக்கள் தம்மை எய்தினர்க்குப் பாலைத் தரும். இவை முக்தியைத் தரும். “ஸ்வாஶோகவைஷு த்ரிஸாவநதஷஸஃ” என்பதை வ்யதிரேகஸாமாநாதிகரண்யமாகக் கொண்டு (ஶாஸஃ) என்பதற்கு விஶேஷணமாக அந்வயிப்பர் சிலர். ஷஷ்டீஸமாஸமாகக்கொண்டு வக்த்ரஸதாராவுக்கு விஶேஷணமாக அந்வயிப்பது சிறக்கும். [ஸ்வாஶோகவைஷு த்ரிஸாவநதஷஸஃ வக்த்ரஸதாரஃ] க்ஷோகமென்று காஶத்துக்கும் பார்வைக்கும் பெயர். எம்பெருமான் தனது கடாக்ஷ வீக்ஷணத்தாலே த்ரிஸாவநதஷஸ்ஸையும் போக்கியருள்பவன்; திருவாழிபாழ்வான் ஸ்வப்ரகாஶத்தாலே அந்தன் செய்பவன், முதல்பக்ஷத்தில் தஶோபாயதய சஜ்ஞாநம்.

[ஸாநுபந்தம் ஶ்ரியம் வர்த்ததாம்] ஸம்பந்தமும் தொடர்ச்சி யோடே கூடியிருக்கையாவது விச்சேதமற்றிருக்கை; ஶாஶ்வதமான என்றபடி. செல்வத்தை மேன்மேலும் பெருகச் செய்கவென்கை. [வர்த்ததாம்] இந்த க்ரியாபதம் "வ்ருதுஞ் வர்த்தநே" என்ற தாதுவில் நிஷ்பந்நமென்று ப்ரமிக்கும் சிலர், 'வர்த்ததாம், வர்த்தேதாம், வர்த்ததாம்' என்றுகொண்டு "வர்த்ததாம்" என்றன்றோ ப்ரயோகிக்க வேணும்; வர்த்ததாமென்னவொண்ணாதேயென்று தோஷம்பண்ணுவர்கள். அங்ஙனன்று; ப்வாதியில் "வர்த—வர்த்தநே" என்றொரு தாதுவுண்டு; அதில் லோட் ப்ரதமபுருஷ ஏகவசநரூபமாய்த்து இது. வர்த்ததாம், வர்த்தேதாம், வர்த்ததாம்—இதி || "ஸ்வாமித்வம் ச ஸ்வந்த்ராஸ்ய 'வர்த்ஸே' ரோகம் வர்தீ ஸ்ரீ!" என்றார் ஆழ்வானும் ஸுந்தரபாஹுஸ்தவத்திலே.

இஸ்ஸ்லோகத்தில் கண்ணபிரானுடைய பசுக்களின் பரமாக ஒரு பொருள் தோன்ற ஶப்தவிந்யாஸம் பண்ணின இதற்குக் கவியின் அதிசதுராதிஶய ப்ரகடநோத்தேஜித வாக்சாதிஶய மேயாய்த்துப் ப்ரயோஜநம். இங்கே த்வநியா? உபமாலங்காரமா? ஶ்லேஷமா? எங்ஙனே நிர்வஹிப்பதென்னில்; சிலர் சொல்லக்கூடும்—உபமாஸூசகமான இவாதிகள் இல்லாமையாலே உபமாலங்காரம் சொல்ல இடமில்லை; மாககாவ்யத்தில் ஶ்ரீக்ருஷ்ண வர்ணநத்தில் "ராத்ரௌ ஜதி ப்ராப்தவதீ:வதாகா: ராஜம் விலிக்தா ஜதி வஸந்தயந்தீ:| யஸ்யாமஸேவந்த நமத்வலீகா: ஸமம் வதூபிர் வலபீயுவாந:||" என்ற ஶ்லோகத்தில் போலே ஶப்தஶ்லேஷம் சொல்வதற்கும் இடமில்லை. "ஸதவிந்த்யஶிகமயஃஶ்ரியம் ஸஹ ஸ்ரீ: ஸம்க்ஷோபம் வநஹஸ்திவாஜவேதநீதா:| வார்த்தகோர ஹத ராமேக்ஷணாநாம் ஸாயமீஷ்யம் ந்யதிஶிராம் ஸஹாஸர ஸஸ்ய:||" என்ற ரேவதகவர்ணந ஶ்லோகத்திற்போல ஶுத்தஶ்லேஷம் சொல்வதற்குமில்லை; ஸமம், ஸாமஸ்த்ய ஸித்யாதிபதங்கள் இல்லாமையாலே. ஆனபின்பு த்வநியேயாகக்கடவதென்பர்; அங்ஙனல்ல; "ஜயஸிந்தாராமோக்தஸர்வஶ்ரீபூர்வ ஜீவ

[illegible] என்று பெரிய திருவந்தாதியிற்போல [illegible] ஆன [illegible] ஒரு [illegible] இங்கே [illegible]. (௧௪)

[illegible] (௧௫)

[illegible]	பெரிய போர்க்களத்தில்,
[illegible]	தலைவர்களோடு கூடினதான
[illegible]	இந்திரனது சேனையை
[illegible]	மிகவும் பயப்படுத்தாநிற்கிற,
[illegible]	செருக்கினால் எதிரிகளின் அழைப் பொறுக்கமாட்டாது போர் செய்யத்துடிக்கிற கைகளையுடையரான அஸுரர்களின் கூட்டங்களை
[illegible]	யாதொரு ஸுதர்சன கிரண ஸம்ருத்தியானது கவளீகரிக்கின்றதோ,
[illegible]	பூமி முதலிய எல்லாவுலகத்தையும்
[illegible]	விளையாட்டாகவே ரக்ஷியாநின்ற
[illegible]	அப்படிப்பட்டதான
[illegible]	சக்கரத்தாழ்வானுடைய கிரணங்களின் ஸம்ருத்தியானது.

வஃ — உங்களுடைய
கூநாஜநாஃ ஞுஜிநுதம் வூஜிநடு — பிறவிதோறும் ஈட்டிய பாவங்க
ரஜமூயதா — ஒழித்திடுக. [ஸீ

